


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524







29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit










உதயம் 1580 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 17, 2026

# பாலியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ள இவர்களில் சிலர் எவ்வாறு இன்றும் பாராளுமன்றச் சலுகைகளை அனுபவிக்கின்றார்கள்?



மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் இவர்களில் சிலர் தற்பொழுதும் பாராளுமன்றத்திற்கு உறுப்பி-னர்களாகச் சென்று அனைத்து சலுகைகளையும் எவ்வித சல-னமுமின்றி அனுபவிக்கின்றார்கள். முன்னர் மைத்திரி-மகிந்தா மற்றும் ரணில் ஆட்சிக் காலத்தில் கிடைத்த “சாக்குப் பைகள்” தற்போது கிடைப்பதில்லை என்ற ஏக்கம் இங்கு அமர்ந்திருக்கும் பலரின் முகங்களில் தாண்டவமாடுகின்றது.

பின்வரிசையில் அமர்ந்திருக்கும் நால்வருக்கும் மாகாண பதவிகள் “ஆசை“ ஊட்டப்பட்டிருக்கலாம் என்ற ஊகம் வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்கு புரிந்திருக்கும்.

## BECOMING: A JOURNEY TO WHOLENESS" - A Dance Evening presented by Shakti Narthanalayam-Toronto.

# "சக்தி நர்த்தனாலயம்" வழங்கிய "முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்" நாட்டிய நிகழ்ச்சி பல உணர்வுகளை வெளிக்காட்டியது





ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரின் “சக்தி நர்த்தனாலயம்“ வழங்கிய “முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்“ நாட்டிய நிகழ்ச்சி கடந்த 12-07-2026 ஞாயிற்றுக்கிழமை “யோர்க்வுட் நூலக கலையரங்கில் நடைபெற்றபொழுது மண்டபம் நிறைந்த நடன ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பல உணர்வுகளை வெளிக்காட்டியது மட்டுமன்றி அவசியமான ஒரு நோக்கத்திற்கான ஒரு மேடை என்பதை வெற்றிகரமாகப் பிரதிபலித்தது என்றும் கூறலாம்.

ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரின் “சக்தி நர்த்தனாலயம்“ நடனப் பள்ளியின் சிரேஸ்ட மாணவியான செல்வி மி-செல் நிருசியா கொட்வின் பிரதான நடனத் தாரகையாக விளங்க அன்றைய தினம் நடனப் பள்ளியின் அடுத்த நிலை மாணவிகளும் பங்கெடுத்த இந்த நடன மேடையும் முழுதான நடன நிகழ்ச்சியும் குருவின் திறமையையும் பிரதான நடனத் தாரகையின் பயிற்சியின் அர்ப்பணிப்பையும் ஏனைய நடனச் செல்விகளின் அபாரமான நடனப் பயிற்சியையும் குருவின் வழிகாட்டலை பின்பற்றிய நேர்த்தியையும் எடுத்துக் காட்டின என்றால் மிகையாகாது. (தொடர்ச்சி ம் பக்கம்)












# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரம்மோத்ஸவ விஞ்ஞாபனம்

12.07.2026 ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மஹோற்சவப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது தொடர்ந்து நடைபெறவுள்ள விஷேட திருவிழாக்களில் கலந்து சிறப்பிக்குமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கைலாச வாகனம்**
17.07.2026
வெள்ளிக்கிழமை
வசந்தமண்டப பூஜை - மாலை 7:00 மணி

**மஞ்சம்**
21.07.2026
செவ்வாய்க்கிழமை
வசந்தமண்டப பூஜை - மாலை 7:00 மணி

**நம்பியாண்டார் நம்பி உற்சவம்**
22.07.2026
புதன்கிழமை
வசந்தமண்டப பூஜை - மாலை 7:00 மணி

**மாம்பழத் திருவிழா**
23.07.2026
வியாழக்கிழமை
வசந்தமண்டப பூஜை
மாலை 7:00 மணி


**சப்பறம்**
24.07.2026
வெள்ளிக்கிழமை
வசந்தமண்டப பூஜை
மாலை 7:00 மணி

**தேர்**
25.07.2026
சனிக்கிழமை
வசந்தமண்டப பூஜை
காலை 7:00 மணி
தேர் வீதியுலா
காலை 9:00 மணி

**சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா வாகனத்தரிப்பிடம்**

P1: 3200 Kennedy Rd (School)

P2: 2885 Kennedy Rd (Church)




**தீர்த்தம்**
26.07.2026
ஞாயிற்றுக்கிழமை
வசந்தமண்டப பூஜை காலை 7:45 மணி
தீர்த்த உற்சவம் காலை 9:00 மணி

திருவிழாக் காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

11.08.2026 செவ்வாய்க்கிழமை - ஆடி அமாவாசை விரதம் (பிதிர்தர்ப்பணம் காலை: 7am - 1pm)

14.08.2026 வெள்ளிக்கிழமை - ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா (காலை: மங்கள நீராட்டு, மாலை: ருதுசாந்தி)

14.08.2026 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்

21.08.2026 வெள்ளிக்கிழமை - வரலட்சுமி விரதம் (சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவும்.

3025 Kennedy Rd, Unit 10, Scarborough ☎ 416.291.8500

temple@vinaayagar.com vinaayagar.com vinaayagar LIVE on IPTV Eagle # 375, Star #1533 YouTube vinaayagar

# உதயன் கதிரோட்டம்

## தாயகத்தின் "தமிழர் அரசியல் தளத்தில்" நிற்கும் அனைவருமே சந்தர்ப்பவாதிகளாக தங்கள் இருப்பைத் தொடர்வதால் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்களா?

எமது தாயக மண்ணில் தங்களை அரசியல் தளத்தில் தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொண்டும் தங்களை தொடர்ந்து தக்க வைக்க முயலும் ஏனைய "புறக்கணிக்கப்பட்ட" அரசியல்வாதிகளும், பாராளுமன்ற கதிரைகளை அலங்கரிக்கும் சம்பளம் பெறும் அரசியல்வாதிகளுமாக அனைவரையும் சேர்த்துப் பார்க்கும் போது அனைவருமே "குட்டையில் ஊறிய மட்டைகளாகவே" வலம் வருகின்றார்கள் என்பதை நாம் அறிவோம். பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒன்றாக இல்லாது அவர்களின் வாழ்க்கை தரத்தை உச்சத்திற்கு உயர்த்துவதும் அத்துடன் பதவிகள் இல்லாத காலத்திலும் கோடீஸ்வரர்களாக தங்கள் குடும்பத்தினர் அனைவரும் அவர்களது வாழ்க்கையை தக்க வைத்துக் கொள்ளவும் வழி வகுக்கும் ஒரு அரசப் பதவி என்று தான் அவர்களும் எண்ணியபடி உள்ளார்கள். இன்னொரு பக்கத்தில் தங்கள் வாழ்க்கையை சிரமங்களுடன் நகர்த்திச் செல்லும் பொதுமக்கள் கூட தமிழ் சிங்கள இஸ்லாமிய அரசியல்வாதிகளை நன்கு புரிந்து வைத்துள்ளார்கள். ஆனாலும். வாழ்க்கையை நகர்த்திச் செல்வதற்கும் தங்கள் குடும்பங்களைக் கவனிக்கவும் போதிய பொருளாதார வளங்கள் அற்றவர்களாக வாழும் அவர்கள் "மௌனமாகவே" இருந்து விடுகின்றார்கள்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களாக தற்போது பதவிகளை வகிக்கும் அனைவருக்கும் சலுகைகள் மற்றும் பொருளாதார வளங்கள் தொடர்ச்சியாகவே கிடைக்கின்றன. மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் தமிழ் மக்கள் மத்தியில் வரமுடியாதவர்களாகவும் உள்ள பலர் தங்கள் முயற்சியை இன்னும் கைவிடுவதாக இல்லை பாராளுமன்ற பதவிகளை இழந்தாலும் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டியிட்டு குடும்ப அரசியலை தொடரும் நப்பாசையில் சுரேஸ் பிரேமச் சந்திரன் போன்றவர்கள் "மூழ்கி" உள்ளார்கள். மறுபக்கத்தில். கட்சியினால் ஒதுக்கப்பட்டவராகவும் அடையாளம் காணப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் தனது எம். பி பதவி மூலம் தன்னை தக்கவைக்கப் பார்க்கின்றார். அண்மையில் பதவிக் காலம் முடிந்து தனது நாட்டுக்குச் செல்லும் சுவிற்சலாந்து தேசத்தின் இலங்கைத் தூதுவரை தனது சகாக்கள் இருவரோடு சென்று அவர் சந்திக்கின்றார். ஆனால் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களோ, இயக்கத்திற்கும் சமூகத்திற்கும் இனத்திற்கும் விசுவாகமாக இருந்து தொடர்ந்து செல்வம் அடைக்கலநாதனை கட்சியிலிருந்து வெளியேற்ற முனைந்தும் அவர்களால் இயலாமல் இருக்கின்றது. பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய செல்வம் அடைக்கலாதன் தமிழர்களை பிரதிநித்துவம் செய்யத் தகுதியானவரா என்பதை மக்களும் தமிழீழ விடுதலை இயக்கமும் விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

அடுத்ததாக நாம் இங்கு குறிப்பிடவுள்ள விடயமானது தமிழ்நாட்டுக்குச் செல்வதில் "நான் முந்தி நீ முந்தி" என்ற முனைப்போடு செயற்படுகின்ற தனிநபர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் சார்ந்தவர்களின் அவர்களது தமிழகப் படையெடுப்பு. "தமிழ்த் தேசியப் பேரவை" என்னும் ஒரு "அரசியல் கூட்டு" பிரநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழகம் சென்று தற்போதைய முதலமைச்சர் விஜேய் அவர்களை முதலில் சந்தித்தார்கள். அவசரப்பட்டும் தீவிர அவாவுடனும் நாம் முன்னர் குறிப்பிட்ட "நான் முந்தி நீ முந்தி" என்ற அடைமொழியோடு சென்று அவர்கள் முதலமைச்சர் விஜேயுடன் உரையாடியவை மற்றும் அவரிடம் கையளித்த மகஜர் போன்றவற்றில் ஏதாவது புதிதாக இருந்தனவா அல்லது விஜேய் அவர்களால் நிறைவேற்றக் கூடிய ஏதாவது உள்ளதா என்று பலரும் அறிய விரும்புவார்கள்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக விஜேய் தமிழ்நாட்டுத் தேர்தலில் போட்டியிட்டபோது இந்த குழுவில் சென்றுள்ளவர்கள் அவரைப் பற்றி என்ன விமர்சனம் செய்தார்கள்? விஜயின் ரசிகர்கள் பற்றி தரக்குறைவாக விமர்சனங்களை வைத்தார்கள் என்பதையெல்லாம் பலர் தங்கள் விமர்சனங்களைா எழுதியுள்ளாரகள்.

அதேவேளை தமிழக அரசின் முன்னாள் முதல்வர் ஸ்டாலினை அவரது ஆட்சிக் காலத்தில் சென்று சந்தித்தவர்கள் அவரிடம் தெரிவித்த கருத்துக்களையே இம்முறை விஜேய் அவர்களோடு பகிர்ந்து கொண்டுள்ளார்கள். முன்னர் ரணில் விக்கிரமசிங்க பற்றி தெரிவித்த அதே கருத்துக்களையே தற்போதும் விஜேய் அவர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இவையெல்லாம் தங்கள்பற்றி எமது தாயக தமிழ் மக்கள் உயர்வாகக் கருதி எதிர்வருகின்ற தேர்தல்களில் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு சென்றிருந்தால் இது ஏற்புடையது அல்ல என்பதையும் அவ்வாறான மனநிலை மக்களிடம் இல்லை என்பதையும் நாம் இங்கு கூறிவைக்கின்றோம்.

அண்மையில் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் இலங்கை ஜனாதிபதி அநுரவுடன் உரையாடிய போது "தமிழ் அரசியல் கைதிகளை நீங்கள் விடுதலை செய்ய வேண்டும்" என்று கேட்டபோது அநுர அவரிடம் "நீங்கள் ரணில் மற்றும் மகிந்தா. போன்றவர்களோடு "உறவாடிக் கொண்டிருந்த" போதுஅதைச் செய்திருக்கலாமே? என்று சாணக்கியனை மடக்கினாராம். இவ்வாறுதான எமது தாயகத்தின் தமிழருக்கான அரசியல் என்று நம்பப்படும் தளத்தில் உள்ளவர்கள் எவருமே நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை. எனினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரு "இடத்தை" எமது மக்கள் வழங்கினாலும் அவ-ரோடு "கிட்ட" இருப்பவர்கள் போதிய அனுபவம் இல்லாதவர்களாக உள்ளதும் மக்களுக்கு அதிருப்த்தி தரும் செய்தியாகவே இருக்கும் என்பதே யதார்த்தம்!

இதேவேளை. தற்போது சுமந்திரன் மற்றும் மனோ கணேசன் ஆகியோரின் ஏற்பாட்டில் ஒன்றிணைந்துள்ளதைக் காட்டும் நபர்களில் சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளார்கள். மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களும் உள்ளார்கள். தெற்கில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் அதில் அமைச்சர் பதவியை பெறும் தந்திரத்தை நன்கு தெரிந்து வைத்துள்ளவர்களும் உள்ளார்கள். 2009ம் ஆண்டு தமிழ் மக்களும் போராளித் தலைவர்களும் போராளிகளும் கொல்லப்பட்டபோது மௌனத்துடன் மகிழ்ச்சியை அனுபவித்தவர்கள் இன்று மௌனம் கலைத்து மக்களுக்காக இணைகின்றோம் என்ற பொய்யான முகத்தோடு வந்துள்ளார். அவர்களைக் கவனிக்க வேண்டியவர்கள் தமிழ் முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் தான்!

Canada We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 • Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca • email: Uthayannews@yahoo.com




## அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு



Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) அமெரிக்காவில் உள்ள உயர்தர உண-வகம் ஒன்றிக்கும் அனுபவமுள்ள Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) ஆகியோர் தேவை.

விண்ணப்பதாரர்கள் கனடிய குடியுரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் தமிழ்-மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களாக இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். தென்னிந்திய மற்றும் மேற்கிந்திய உணவுகள் தயாரிப்பதில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

WhatsApp Text Messages மூலம் தயவு செய்து விண்ணப்பங்களை அனுப்பவும். அதில் கீழ்க் கண்ட விபரங்களையும் இணைக்கவும்: விண்ணப்பதாரியின் வயது, திருமண நிலை, மற்றும் தொலைபேசி எண்.

**விண்ண்ப்பம் அனுப்பவேண்டிய எண்:**

**(937) 475-5992**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோபூர்வ சின்னத்தை மாற்றும் ஒரு முன்மொழிவை தமிழரசுக் கட்சி சமர்பித்தது



வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு தொல்லியல் திணைக்களத்தால் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு நியாயமானதும், அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கை தமிழரசுக் கடசி, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், நாட்டின் அனைத்து குடிமக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தாத தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சின்னம் மாற்றப்பட வேண்டும் என்பதும் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்றாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரு பிரதிநிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி ஏ. சமந்திரன் பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து, இவ்விடயங்கள் தொடர்பில் கருத்துகளை முன்வைத்துள்ளார்.

அந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலா-ளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் பினவரும் விடயங்களை தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் தெரிவித்துளளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளால் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்ரமசிங்கவுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கின் நிலப்பரப்புகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து சிங்கள மக்களும் உரிமை கோரும் நிலையில், தொல்லியல் திணைக்களம் சிங்கள பௌத்தர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துவரும் பின்னணியில், கடந்த ஆண்டு அரசாங்கம் 19 சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட புதிய தொல்லியல் ஆலோசனைக் குழுவை நியமித்திருந்தது.

பௌத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியின் கையொப்பத்துடன், 2025 நவம்பர் 1ஆம் திகதி சனிக்கிழமை வெளியிடப்பட்ட 2460/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நியமிக்கப்பட்ட இந்த தொல்லியல் ஆலோசனைக் குழுவின் பதவிக்காலம் 2025.03.10 முதல் 2027.03.09 வரை அமுலில் இருக்கும்.

தொல்லியல் திணைக்களம் இன, மத வேறுபாடின்றி செயற்படுகிறது என்ற நம்பிக்கையை தமிழ் மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமாயின், பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள 54 வர்த்தக நிலையங்களும் அகற்றப்பட வேண்டும் என, கொழும்பில் பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்ரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பழமை வாய்ந்த திருக்கோணேஸ்வரம் ஆலய வளாகத்திலேயே 54 வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், பக்தர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தது.

பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில், தொல்லியல் திணைக்களம் போரதீவுப்பற்று பிரதேச சபைக்கும், வாழைச்சேனை பிரதேச சபைக்கும் எதிராகத் தாக்கல் செய்துள்ள வழக்குகளை மீளப்பெற வேண்டுமெனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரு பிரதிநிதிகளும், பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்திடம் கோரியுள்ளனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேரடியாகச் சென்று, தந்தாமலை முருகன் ஆலயம் உள்ளிட்ட பல பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தால் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து, தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர்கள் மேலும் கோரியுள்ளனர்.

தற்போது பயன்பாட்டில் உள்ள தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ சின்னம், பௌத்தர்களால் புனிதமாகக் கருதப்படும் தர்மச் சக்கரம் மற்றும் சைத்திய ஆகிய சின்னங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு மதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்சங்களைக் கொண்டுள்ள இந்த உத்தியோகபூர்வ சின்னத்தில், ஏனைய மதங்களையும் இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குறியீடுகள் இடம்பெறவில்லை என்பதை பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்திடம் நினைவூட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ITAK) செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், அனைத்து இனங்களும் மதங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் அந்த உத்தியோகபூர்வ சின்னம் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

திருகோணமலை, குச்சவெளி பகுதியில் 37 கிலோமீற்றர் தூரத்திற்குள் 42 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் அந்த இரு தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறிமலை ஆகிய சிவன் ஆலய் உள்ளிட்ட பகுதிகளில், தமிழ் மக்கள் தமது மத வழிபாட்டு உரிமையை சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு தேவையான சட்டப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த காணிகள் தொடர்பான நீதிமன்ற உத்தரவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், மத வழிபாட்டு உரிமைக்கு எந்தவிதத் தடையும் ஏற்படாது. எனினும், நீதிமன்ற உத்தரவுகளை மீறி தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்தும் அந்தப் பகுதிகளில் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

# வவுனியாவில் மாணவர்களை ஏற்றிச் செல்லும் பெற்றோர்களுக்குப் பொலிஸார் அவசர எச்சரிக்கை

## ஒரு வார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது!





பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்லும் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளுக்குக் கட்டாயமாகத் தலைக்கவசம் (Helmet) அணிவிக்க வேண்டும் என வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்காகப் பெற்றோர்களுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க தலைமையில், வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக 15ம் திகதி புதன்கிழமை அன்று விசேட விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தகுந்த தலைக்கவசம் இன்றித் தங்களது பிள்ளைகளைப் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி வந்த பெற்றோர்கள் மறிக்கப்பட்டு, அவர்களுக்கு ஆபத்துகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், சிறுவர்களுக்கான தலைக்கவசத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் பொலிஸாரால் விநியோகிக்கப்பட்டன.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க, "இன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் மோட்டார் சைக்கிள்களில் அழைத்து வரப்படும் அனைத்துச் சிறுவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் பிரத்யேகத் தலைக்கவசம் அணிவிக்கப்பட வேண்டும். இந்த ஒரு வார கால அவகாசம் நிறைவடைந்த பின்னர், விதியை மீறும் பெற்றோர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என எச்சரித்தார்.

இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் பதிவாகின்றன. இதில் தலைக்கவசம் அணியாமல் பயணிக்கும் சிறுவர்கள் பாரிய தலைக்காயங்களுக்கு உள்ளாகி, உயிரிழக்கும் அல்லது நிரந்தரப் பாதிப்புக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகவே வவுனியா போக்குவரத்து பொலிஸார் இந்த வி-சேட அதிரடிப் பரிசோதனையையும் விழிப்புணர்வையும் ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவடையும் நேரங்களில் இந்த விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின்படி, மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் ஓட்டுநர் மட்டுமன்றி, பின்னால் பயணிக்கும் நபரும் (அவர் சிறுவராக இருந்தாலும்) தரச்சான்றிதழ் பெற்ற தலைக்கவசத்தை (SLSI Certified Helmet) அணிவது கட்டாயமாகும். அத்துடன் இலங்கையில் பதிவாகும் மொத்த வீதி விபத்துக்களில் 40% க்கும் அதிகமானவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகவே உள்ளன.

காலை வேளையில் பாடசாலைக்கு அவசரமாகப் பிள்ளைகளை அழைத்து வரும்போது, பெற்றோர்கள் கவனக் குறைவாக முந்திச் செல்ல முற்படுவதால் பாடசாலை வலயங்களுக்கு (School Zones) அருகிலேயே அதிக விபத்துகள் ஏற்படுவதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.



# அதிர்ச்சியளிக்கும் செம்மணிப் புதைகுழிப் பயங்கரம்:

## மேலும் இரண்டு சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.!!

**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் இரண்டு சிறு குழந்தைகளின் என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி ஆரம்பமாகியது. இதன்போது புதிதாக சிறு குழந்தைகள் இருவருடைய என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை, மேலும் இரண்டு மனித என்பு எச்சங்கள் குவியல்களும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

இருப்பினும், 17ம் திகதி புதிதாக மனித என்புத் தொகுதிகள் எதுவும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை.



செம்மணி மனிதப் புதைகுழியின் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்று மற்றும் இரண்டிலிருந்து, இதுவரை மொத்தமாக 414 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 409 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – ஒன்ராறியோவில் "சிகப்புச் சூரியன்"



அன்று புதன் கிழமை, யூலை மாதம் 15 ஆம் திகதி 2026. காலை எழுந்து யன்னலுக்கால் வெளியே பார்த்தேன். வழமை போலக் கேட்கும் குருவிகளின் சத்தம் கேட்கவில்லை. மௌனத் திரை விரிக்கப்பட்டிருந்தது. என்னவாக இருக்கும்? வெளியே மப்பும் மந்தாரமாய் இருப்பது போலத் தெரிந்தது. வானத்தைப் பார்த்தேன், கருமேகங்ளைக் காணவில்லை, மழை வரும் அறிகுறியுமில்லை. அதற்குப் பதிலாக மங்கலான மஞ்சள் நிறத்தில் வானம் இருண்டு கிடந்தது. அதன் நடுவே என்றும் இல்லாதவாறு வானத்தில் சூரியன் சிகப்பு வட்டத் தட்டுப் போலத் தகதகவென்று சிறிது நேரம் காட்சி தந்தது. ஒரு கணம் சந்திரனோ என்று எண்ணத் தோன்றியது. இல்லை கிழக்குவானில் சூரியன்தான்! சூரியனை நேரடியாகப் பார்க்க முடிந்தது. அந்த வானத்து மௌனம் ஏதோ ஒருவகை இனம்புரியாத பயம் காட்டியது. இது போன்றதொரு சூழ்நிலையை ஏற்கனவே அலஸ்காவிலும், ஐஸ்லாந்திலும் பார்த்திருக்கின்றேன்.

கனடாவுக்கு என்ன நடந்தது, பூமியில் மாற்றமில்லை, சூரியனிலும் மாற்றமில்லை, ஆனால் இடை நடுவேதான், வானத்தில் அந்த மாற்றம் நடந்தது. இணையத்தில் சென்று தேடினேன், காரணம் புரிந்தது. இதற்கெல்லம் காரணம் கடனாவின் சில பகுதிகளில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீ என்தை அறிய முடிந்தது. சுமார் 800 இடங்களில் காட்டுத் தீ பரவியிருந்தது. கனடாவின் தென் பகுதி மட்டுமல்ல, காற்று வீசும் திசையில் இருந்த அமெரிக்காவும் இதனால் பாதிக்கப்பட்டது. மேற்கு மற்றும் வடக்கு ஒன்டாரியோ மற்றும் வடக்கு மினசோட்டா முழுவதும் பரவி வரும் ஒரு பெரிய காட்டுத்தீயே இதற்கு மூல காரணமாகும். இதனால் இப்பகுதிகளில் காற்றின் தரம் "ஆரோக்கியமற்ற" நிலைக்கு வீழ்ச்சி அடைந்திருந்தது.





இது போன்ற நிகழ்வு 2023 ஆம் ஆண்டும் நடந்திருந்தது. ஆனால் இதைவிட அது மோசமாக இருந்தது. இதன் காரணமாக அரசு "மஞ்சள் அறிவிப்பு" விட்டிருந்தது. காரணம், ரொரன்ரோ, உலகின் மிக மோசமான காற்றுத் தரங்களில் சிலவற்றைப் பதிவு செய்திருந்தது. அதன் குறியீட்டு அளவு 220க்கு அருகில் இருந்தது, இது "மிகவும் ஆரோக்கியமற்ற" நிலையாக இருந்தது. இதைவிட பாஸ்டன், மாசசூசெட், நியூயோர்க்கின் பெரும்பாலான பகுதிகள், "ஆரோக்கியமற்றது" என்ற வரையிலான வரம்பில் இருந்தன. அதனால் மாநிலம் தழுவிய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.


அதாவது தேவையில்லாமல் வெளியே நேரத்தைச் செலவிட வேண்டாம், வெளியே நடக்கும் பொது நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்யும்படியும் கேட்டிருந்தது. பாடசாலை மாணவர்களுக்கும் அந்தக் கட்டுப்பாடு இருந்தது. காட்டுத் தீ எற்பட்ட இடங்களில் உள்ள மக்களை வெளியேற்றுவதில் மாகாண அரசுகள் செயற்பட்டன. குடியிருப்புகள் எரிந்தாலும், மக்கள் காப்பாற்றப்பட்டனர். ஆனால் மிருகங்கள் பறவைகள் மற்றும் உயிரினங்கள் தப்ப வழியில்லாமல் நடுவே அகப்பட்டுக் கொண்டன. இயற்கையின் அழிவைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தாலும், இப்படியான நிகழ்வுகள் வருடா வருடம் அதிவெப்பம் காரணமாக நடக்கத்தான் செய்கின்றன.

வானம் ஏன் என்றும் இல்லாதவாறு மஞ்சள் நிறமாக மாறியது என்பதற்கு அடிப்படை இயற்பியல் காரணம் இருந்தது. பொதுவாகக் காற்றில் உள்ள புகைத் துகள்கள் சூரிய ஒளியைச் சிதறடிப்பதுண்டு. ஆனால் அவை எல்லா நிறங்களையும் சமமாகச் சிதறடிப்பதில்லை. சூரிய ஒளி வெள்ளையாகத் தெரிந்தாலும், அது எல்லா நிறங்களின் கலவையாகும். குறிப்பாக நீலம் மற்றும் ஊதா போன்ற குறுகிய அலைநீளங்களைக் கொண்ட ஒளியை அவை மிகவும் திறம்படச் சிதறடிக்கின்றன, அதே சமயம் சிவப்பு, ஒரேஞ்சு மற்றும் மஞ்சள் போன்ற நீண்ட அலைநீளங்கள் மிகவும் எளிதாக ஊடுருவிச் செல்கின்றன.

பொதுவாக வானத்தைப் பார்த்தால் சாதாரணமாக, வானம் என்பது சிதறடிக்கப்பட்ட நீலநிற ஒளி மேலே அங்குமிங்கும் பட்டுத் தெறிப்பதாகவே இருக்கும். அதனால் வானம் நீலமாகவே கண்ணுக்குத் தெரியும். ஆனால், காட்டுத்தீயின் புகை வளிமண்டலத்தில் சேரும்போது, அந்த நீலத்தின் பெரும்பகுதி வடிகட்டப்பட்டு, அதற்குப் பதிலாக நிறமாலையின் வெப்பமான பகுதியால் ஆதிக்கம் செலுத்தப் படுகின்றது. அதனால்தான் கடுமையான புகை சூழ்ந்த நாட்களில், பகல் நேரங்களில் மங்கலான, மஞ்சள் நிற வானமும், மாலை நேரங்களில் வழக்கத்திற்கு மாறாகத் தீப்பிழம்புகள் போலத் தோற்றமளிக்கும் பிரகாசமான சூரிய அஸ்தமனங்களும் காணப்படுகின்றன. எனவே, சிகப்பு சூரியன் என்பது சூரியன் மாறுவதல்ல. சூரியனின் ஒளி உள்ளே வரும் வழியில் காற்று அதன் செயல்பாட்டை மாற்றுவதாகும்.

அதிகப் புகை உள்ள சூழலில் நீண்ட நேரம் வெளியில் இருக்க நேர்ந்தால், இருமல், தொண்டை எரிச்சல், கண் அரிப்பு அல்லது மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளைக் கவனிக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டது. உங்களுக்கு ஆஸ்துமா, இதய நோய் இருந்தாலோ, அல்லது நீங்கள் கர்ப்பிணியாகவோ, முதியவராகவோ இருந்தாலோ, இப்படியான அறிகுறிகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இப்படியானவர்கள் தான் அதிக புகை வெளிப்பாட்டால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள்.

**- குரு அரவிந்தன்**

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் உண்மையைக் கண்டறிய எமது அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்கின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

இலங்கை செய்திகள்
Sri Lanka News



செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் காணாமல்போனோர் தொடர்பான உண்மைத்தன்மையை கண்டறிவதற்கு, அரச தரப்பிலிருந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கையிதன் அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது தற்போதைய அரசின் முக்கிய நோக்கம் என்று தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனைத்து மக்களுக்கும் பொதுவான ஜனாதிபதி என்பதைச் சுட்டிக்காட்டினார்.

வரலாற்றில் முதன்முறையாக இந்த அரசுக்கு வடக்கு மக்களிடமிருந்து பலத்த ஆதரவு கிடைத்துள்ளது என்றும், காணி விடுவிப்பு உள்ளிட்ட பல வழிகளிலும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் தெற்கு என இரு தரப்பிலும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது பெற்றோர் இன்றும் கண்ணீர் வடிக்கும் நிலை நீடிக்கின்றது என்று குறிப்பிட்ட நீத்து அமைச்சர், அந்த வேதனையைத் தீர்க்க அரசு முன்னுரிமை அளிக்கின்றது என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "நாங்கள் ஆட்சிக்கு வரும்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தில் போதிய ஆளணி வளம் இருக்கவில்லை. நாம் உடனடியாகப் புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்து 60 பேரை அதில் இணைத்துள்ளோம். இதற்கென வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. தற்போது தலா மூன்று பேர் கொண்ட 15 விசாரணைப் புலனாய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், நிலுவையிலுள்ள 11 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.

செம்மணி விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர், அது போன்ற சம்பவங்களில் உண்மையை வெளிக்கொணரவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும், அதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.



# இலங்கையில் மாகாண ஆளுநர்களின் தொடர் பதவி துறப்பு இடம்பெறுகையில் பிரதமரும் பதவியைத் துறப்பாரா? என கேள்வி எழுப்பும் சீலரத்ன தேரர்

மாகாண ஆளுநர்கள் தொடர்ச்சியாக இராஜிநாமா செய்து வரும் சூழலில், தற்போதைய பிரதமரும் தனது பதவியை இராஜிநாமா செய்வாரோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என்று ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய மாகாண ஆளுநர் தனது பதவியை இராஜினாமா செய்தமைக்கு சில தரப்பினரின் அழுத்தங்களே காரணம் எனச் சந்தேகிப்பதாகத் தெரிவித்த அவர், அரசில் உள்ளவர்கள் அனைவரும் பதவிகளிலிருந்து விலகி, நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், அடுத்தடுத்து நியமிக்கப்படும் ஆளுநர்கள் எத்தனை நாள்கள் பதவியில் நீடிப்பார்கள் என்பது கேள்விக்குறியே என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் அண்மைய கருத்துகள் குறித்தும் சீலரத்ன தேரர் விமர்சித்தார். "தங்களுக்கு இன்னும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்று கிராமங்களுக்குச் சென்று கூறிவருவது அரசுன் மீதான நம்பிக்கையைச் சிதைக்கின்றது. அரசுக்கு முழு அதிகாரமும் இருக்கும்போது, அதிகாரமில்லை என்று கூறுவது பொய்யானதாகும். இளமைக் காலத்தில் போராட்டம் நடத்தியவர்களுக்குச் சிறிதளவேனும் அறிவு இருக்க வேண்டும். போதைப்பொருள்களை உட்கொண்டுவிட்டு மேடைகளில் பேசுகின்றார்களா என்று கேட்கத் தோன்றுகின்றது. இவர்களின் இத்தகைய பேச்சுகள் ஜனாதிபதியின் கௌரவத்துக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்துகின்றன" என்று அவர் சாடினார்.

இந்தச் சூழலில், மாகாண ஆளுநர்களைப் போல் கலாநிதியாக இருக்கும் தற்போதைய பிரதமரும் தனது பதவியை விரைவில் இராஜிநாமா செய்வாரோ என்ற பலத்த சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அடியோடு ஒழிக்க அரசு முன்வர வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



ஜனநாயகத்தின் தூண்களாக விளங்கும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தில் தலையிடுவதைத் தவிர்த்து, ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க அரசு முன்வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகியன ஜனநாயகத்தின் மூன்று தூண்கள் என்றும், நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நீதித்துறை மிக முக்கிய வகிபாகத்தை ஆற்றி வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுயாதீன ஊடகங்களும், சிவில் சமூகமுமே ஏனைய இரு முக்கிய தூண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சூழலில், தற்போதைய அரசு நீதிமன்றத்துக்குப் பாரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகக் குற்றம் சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர், உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரித்தல் மற்றும் உயர்நீதிமன்றங்களில் நிலவும் நீதியரசர்களின் வெற்றிடங்களை நிரப்பாது விடுதல் போன்ற செயற்பாடுகள் நீதித்துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் சவால்கள் என்றும் தெரிவித்தார்.

நீதியரசர்களை நியமிக்காது வெற்றிடங்களை வைத்திருப்பது நீதிமன்றத்தின் மீதான மறைமுக அழுத்தமாகும் என்று குறிப்பிட்ட அவர், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதியை நிலைநாட்ட ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் உறுதியுடன் இருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "ஜனநாயகத்தையும் நீதிமன்றத்தையும் சீர்குலைக்காது, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கக் கூடிய புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதே தற்போதைய தேவையாகும். மக்கள் எமக்கு வழங்கிய ஆணையும் ஜனாதிபதி முறைமையை ஒழித்து ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கே ஆகும். இந்த மக்கள் ஆணையை நிராகரிப்பது, மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்." - என்றார்.



# முள்ளியவளையில் நெற்கொள்வனவு ஆரம்பமாகிய பணிகளை நேரில் சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட எம்.பி ரவிகரன்!

**- ந.லோகதயாளன்**

விவசாயிகளிடமிருந்து உடனடியாக சிறுபோக நெற்கொள்வனவை ஆரம்பிக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 08.07.2026 அன்று பாராளுமன்றக்க குழு அறையில் இடம்பெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியதுடன், கடந்த 13.07.2026 ஆம் திகதியன்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரனிடமும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது தொடர் வலியுறுத்தலையடுத்து 15.07.2026 ஆம் திகதியிலிருந்து முள்ளியவளை கமநல சேவைநிலையத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாறு நெல்சந்தைப்படுத்தல் சபையினால் முள்ளியளையில் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அங்கு 16.07.2026 இன்று நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நெற்கொள்வனவு தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டதுடன் நிலமைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

# மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட விளாத்திகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் ஆரம்பம்!




(16-07-2026)

மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட விளாத்திகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மனோன்மணி அறக்கட்டளையின் நிதி அனுசரணையில் மாணவர்களின் நலன் கருதி முன்னெடுக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் 15ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பிக்கப் பட்டு பாடசாபலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மனோன்மணி அறக்கட்டளையின் தலைவர் அகஸ்ரின் சவேரியான் அவர்களின் வழிநடத்தலின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கியமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டமானது அமைக்கப்பட்டு பாடசாலையின் அதிபர் ஆ. குணசேகரன் அவர்களின் தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஜெயரூபன் மற்றும் மனோன்மணி அறக்கட்டளையின் பொருளாளர் பு.அன்ரனி, மற்றும் மனோன் மணி அறக்கட்டளையின் நிர்வாக உறுப்பினர்கள் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டமானது சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் "ஆறு கட்சி கூட்டை" மக்கள் நிராகரிக்க வேண்டுமென ஈ.பி.டி.பி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வேண்டுகோள்!



ஆறு கட்சிகள் கூட்டு வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்கும் எனவே தமிழரசு கட்சியின் உடைய இந்த திட்டங்களை தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் காலம் காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் இந்த பிழைப்பை இத்தோடு நிறுத்திவிட்டு அரசியல் செய்ய முடியாவிட்டால் மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டு ஒதுங்கி செல்லவும் என ஈ.பி.டி.பி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாலைமீன் மடுவில் உள்ள அவரது காரியாலயத்தில் 14ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் பேசுகின்ற மக்கள் அனைவரும் ஒன்றை புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து தமிழ் மக்களின் இருப்புக்கு கேள்விக்குறியாகி இந்த நிலையில் மீண்டும் இவ்வாறான தமிழ் கட்சிகள் ஒன்றினைவு வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும்.

எனவே தமிழ் மக்களிடம் கேட்டுக் கொள்வது காலம் காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் இந்த சம்பவம் தமிழரசு கட்சியின் உடைய இந்த திட்டங்களை தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இலங்கை சுதந்திர தினத்தை கொண்டாட்டத்தின் போது தமிழரசு கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த மறைந்த சம்பந்தன் இலங்கை தேசிய கொடியை அசைத்து தமிழர்களுக்கும் சுதந்திரம் கிடைத்ததாக சர்வதேசத்துக்கு நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என அன்று கொண்டாடினார் அதற்கு அவருக்கு சொகுசு வீடு வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இன்று அந்த கட்சியினர் தமிழருக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என இலங்கை சுதந்திர தினத்தில் இலங்கைக்கு சுதந்திர தினம் தமிழருக்கு கரிநாள் என்று இன்று கூறுகின்றனா. இவ்வாறு இவர்கள் காலத்திற்கு காலம் நேரத்துக்கு நேரம் கொள்கைகளை மாற்றி வருகின்றனர்.

இவர்கள் தமிழ் மக்களுக்கு உண்மையான விடிவை தேடி தர வேண்டும் என்ற நோக்கம் இல்லை தங்களுடைய அரசியல் இருப்புக்காகவும் தேவைகளுக்காகவும் கால காலமாக அரசியல் ஆசன இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அரசியல் செய்ய முடியாத கால கட்டங்களில் தங்களுடைய அரசியல் இருப்பை தக்க வைப்பதற்கு.

தமிழ் மக்களை வேறு திசைக்கு திருப்பி தேர்தல் வரும்போது கூட்டுச் சேருவதும் கூட்டினைவதும் தேர்தல் முடிந்த பின்னர் ஆளுக்கு ஆள் பிரிந்து சென்று விடுவார்கள் அதன் பின்னர் தமிழ் மக்களின் இருப்பு தான் கிழக்கு மாகாணத்தில் கேள்விக்கறியாக்கப்படுகின்றது.

எனவே இந்த ஆறு கட்சிகளுடைய கூட்டுச் சேர்வினை தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். மக்கள் விரைவில் உங்களுக்கான பதிலை தருவார்கள்.

இந்த கூட்டுச் சேர்வு வடக்கு மாகாணத்தை படிக்காவிட்டாலும் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழர்களுடைய இருப்பினை நிச்சயமாக இது பாதிக்கும் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உங்களால் அரசியல் செய்ய முடியாவிட்டால் நீங்கள் தயவு செய்து உங்கள் மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டு ஓரமாக ஒதுங்கி நில்லுங்கள் நாட்டிலே படித்த வேலையற்ற பட்டதாரிகள் புத்திஜீவிகள் இருக்கின்றனர் அவர்களிடம் தமிழரசு கட்சியை கொடுங்கள் அவர்கள் அதை வழிநடத்திச் செல்வார்கள் காலம் காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் இந்த பிழைப்பை இத்தோடு நிறுத்தி விடவும் என்றார்.

# கழிவு அகற்றும் உழவு இயந்திர பெட்டியில் பாதையாத்திரைகளுக்கான உணவு பொருட்கள் எடுத்துச் சென்ற மட்டக்களப்பு மாநகர சபை!



கதிர்காமம் நோக்கிய புனித பாதை யாத்திரை மேற்கொண்டு காட்டுப்பகுதிகளின் ஊடாகச் செல்பவர்களுக்கு மட்டக்களப்பு மாநகரசபையின் குப்பை கூழங்களை அகற்றுகின்ற உழவு இயந்திர பெட்டியில் உணவு பொருட்களை எடுத்துச் சென்று உணவு சமைத்து கொடுத்துள்ளமை இந்து மக்களையும் மதத்தையும் அவமதிப்பதான ஒரு மிக மோசமான செயல் என ஈ.பி.டி.பி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாலைமீன் மடுவில் உள்ள அவரது காரியாலயத்தில் 15ம்திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் மிக மோசமான செயல் ஒன்று நடைபெற்றுள்ளது மாநகரசபையின் கழிவு அகற்றும் உழவு இயந்திர பெட்டியில் கதிர்காமத்துக்கு செல்லும் பாதை யாத்திரை களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான உணவு பொருட்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் ஏற்றி உகந்தைக்கு எடுத்துச் சென்று உணவு சமைத்து கொடுத்துள்ளனர்.

இந்த செயல் புனித யாத்திரை செய்யும் இந்து மக்களை இழிவுபடுத்தும் செயலாக கருதுகின்றோம் இதை வன்மையாக கண்டிக்கின்றோம். சுகாதாரத்தை போதிக்கின்றார்கள் சுகாதார பரிசோதகர்கள் எத்தனையோ உணவகங்களுக்கு அனுப்பி சுத்தமாக சுகாதார முறையில் உணவகங்கள் இல்லை என தெரிவித்து அந்த கடைகளுக்கு சீல் வைக்கின்ற அவர்களே இன்று குப்பை கூழங்களை அகற்றுகின்ற உழவு இயந்திர பெட்டியில் உணவு பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது ஒரு மிக மோசமான செயல் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வன்மையாக ஈ.பி.டி.பி கட்சி கண்டிக்கின்றதுடன் எதிர்காலத்தில் இவ்வாறு செயல்பட கூடாது.

அதேவேளை மாநகர சபை ஆட்சியை கைப்பற்றிய தமிழரசு கட்சி ஒரு வருடத்துக்கு மேல் ஆகும் நிலையில் நகரிலுள்ள காந்தி பூங்கா கந்தையா பூங்கா உட்பட உள்ள அனைத்து பூங்காக்களில் குப்பை கூழங்கள் அகற்றாமல் காணப்படுவதுடன் வடிகான்கள் குப்பைகள் நிறைந்துள்ளதுடன் வீதிகளில் குவிந்து கிடக்கும் திண்ம கழிவுகளை அகற்றப்படாததால் துர்நாற்றம் வீசுவதால் வீதிகளால் மக்கள் பிரயாணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அத்தியாவசிய தேவையான இந்த திண்மக் கழிவுகளை அகற்ற உங்களால் முடியாமல் விட்டால் உங்களுக்கு அந்த ஆளுமை இல்லாவிட்டால் நீங்களாகவே விலகிச் சென்று படித்த பட்டதாரிகளுக்கு உங்களுடைய இடங்களை கொடுத்தால் அவர்கள் ஆளுமையோடு இந்த மட்டு மாநகர சபையின் கீழ் உள்ள பிரதேசங்களை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பார்கள்.

ஆகவே காலம் காலமாக மாகரசபையை தமிழரசு கட்சி கைப்பற்றி எந்த விதமான அபிவிருத்தி திட்டங்களும் செய்வதும் இல்லை முறையின்படி திண்ம கழிவுகளை அகற்றுவதும் இல்லை. இன்று எத்தனையோ வீதிகளால் மனிதர்கள் செல்ல முடியாது உள்ளது துர்நாற்றம் வீசுகிறது எனவே ஆளுமை அற்ற தலைவர்கள் இருப்பது தமிழ் மக்களுக்கு எந்த பயனும் இல்லை என்பதுடன் இவ்வாறு மக்களின் வரிப்பணத்தை வீணடித்துக் கொண்டு நேரத்தையும் காலத்தையும் கடத்திக் கொண்டு இருக்காமல் ஆளுமை மிக்கவர்களிடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் இராஜனமா செய்வது மேலானது என்றார்.



# குடமுருட்டிப் பாலத்தின் நிர்மானப் பணிகளைப் பார்வையிட்ட ரவிகரன் எம்.பி

- ந.லோகதயாளன்

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப்பாலத்தினை புதிதாக அமைக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தநிலையில், தற்போது குறித்த பாலத்தினை புதிதாக அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த குடமுருட்டிப்பாலத்தின் நிர்மானப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலம் சீரின்றிய நிலையிலும், மிகவும் ஒடுங்கிய பாலமாகவும் காணப்பட்டதால் அப்பாலத்தினூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பலத்த போகுவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்களால் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த குடமுருட்டிப் பாலத்தின் சீரமைப்புத் தொடர்பில் வவுனியாவடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தார்.

அதேவேளை 10.02.2026அன்று வவுனியா மாவட்டசெயலகத்தில் இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குடமுருட்டிப்பாலத்தைச் சீரமைத்துத்தருமாறு கோரிக்கைவிடுத்திருந்தார்.

அதற்கமைய குறித்த பாலம் தொடர்பில் அமைச்சர் விமல் ரத்நாயக்க வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் விளக்கங்கோரியிருந்தார்.

அந்தவகையில் 19மீற்றர் நீளமான குறித்த குடமுருட்டிப் பாலத்தை அமைப்பதற்கு ஏறத்தாள 80மில்லியன்ரூபா அளவில் நிதி தேவைப்படுமென வவுனியா மாவட்ட வீதி அபாவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.கௌசிகன் பதில் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இவ்வாண்டிற்கான மாகாணக்குறித்தொதுக்கப்பட்ட நிதியில் குறித்த குடமுருட்டிப் பாலத்தினை அமைப்பதற்கு தம்மால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென வடமாகாண பிரதமசெயலாளர் திருமதி.தனுஜா முருகேசன் உறுதியளித்தார்.

இத்தகையசூழலில் குறித்த பாலத்தைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள குடமுருட்டிப்பாலத்தின் நிர்மானப்பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்தோடு குறித்த பாலத்தின் நிர்மானப்பணி தொடர்பான விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளரிடம் தொலைபேசியூடாக கேட்டறிந்துகொண்டார்.

அதற்கமைய இதன்போது வீதி அபிவிருத்தித் திணைக்களப்பொறியியலாளர் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் பதிலளிக்கையில்,

குறித்த குடமுருட்டிப் பாலமானது 49.4மில்லியன்ரூபாயில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு குறித்த பாலமானது 28மீற்றர் நீளமாகவும், 8.5மீற்றர் அகலமாகவும் அமைக்கப்படவுள்ளதாகவும் இதன்போது பொறியியலாளரால் பதில் வழங்கப்பட்டதுடன், பாலத்துடன் இணைந்த 140மீற்றர் அணுகுசாலையும் அமைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த களவிஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியாவடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான செ.சுசீலன், த.தனுசன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேசக்கிளையின் செயலாளர் அமலன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினரோடு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டு?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே இன்றுவரையிலும் ஒரு சமூக உடன்படிக்கை எழுதப்படவில்லை. கதிர்காமத்துக்கு பாதயாத்திரை போன சுப்பிரமணியனின் விடயத்தில் சமூக ஊடக வலைத்தளச் சூழலில் நிகழ்ந்த வெறுப்பு மிகுந்த வாதப்பிரதிவாதங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, இரண்டு சமூகங்களும் எந்த அளவுக்குப் பிளவுண்டிருக்கின்றன என்பதை உணர முடிந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது சமூகங்களுக்கிடையிலான அரசியல் உடன்படிக்கையில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை அதன் தீர்வு முன்மொழிவில் கூறியிருக்கிறது. தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும் அதனை ஏற்றுக் கொள்கிறது. தமிழ்த் தேசிய பெரு மன்றும் ஏற்றுக்கொள்கிறது. தமிழ் தேசிய பேரவையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இங்கே பிரச்சனை, அவ்வாறான ஒரு சமூக உடன்படிக்கைக்கான உரையாடல்கள் இதுவரை தொடங்கப்படவில்லை என்பதுதான். ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய அந்த இடையூடாட்டத் தளம் அவ்வாறான உரையாடல்களுக்குரிய ஒரு தளமாக விரிவடையுமா? தமிழ்த் தேசியப் பேரவையைத் தவிர்த்துவிட்டு அதைச் செய்யப் போகிறார்களா?**



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை தமிழ்நாட்டுக்கு இரண்டாவது தடவையாக பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ் சட்டத்தரணிகள் அமைப்பின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வேகமாக முன்னெடுக்கப்படாத ஓர் அரசியல் சூழலில்,

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு உரிய முன்மொழிவை வரையும் நோக்கத்தோடு புலம்பெயர்ந்த தமிழ் தரப்புக்களும் தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புகள் சிலவும் இணைந்து “ஈழத்தமிழர்கள் உரிமைகள் பெரு மன்று” என்று ஓர் அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பானது திருக்கோணமலையில் ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டிருக்கும் ஒரு பின்னணியில்,

தமிழ்த் தேசியப் பேரவையானது ஒரு தொகுதி சிவில் சமூகங்களோடு இணைந்து யாப்புருவாக்கத்திற்கான ஒரு நிர்ணய சபையை உருவாக்கியிருக்கும் ஒரு பின்னணியில்,

தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில்,

புலம்பயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களின் பின் பலத்தோடு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டை முன்வைத்து அந்தத் தீர்மானத்தின் இலக்குகளை நோக்கி தமிழ் அரசியலை முன்னெடுத்தும் நோக்கத்தோடு ஒரு மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கும் ஒரு பின்னணியில்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை, கொழும்பில், தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு கட்சிகள் இணைந்து ஓர் ஒருங்கிணைப்பு முயற்சியை அறிவித்துள்ளன.

அதுதொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்கள் மத்தியில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளும் மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து இணக்கம் ஒன்றுக்கு வந்துள்ளன.

இதுபோன்ற ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவராகிய மனோ கணேசன் பல காலமாக கூறி வருகிறார். தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு இடையே இணைந்து செயல்படலாம், அல்லது தமிழ் பேசும் சமூகங்களைப் பிரதிபலிக்கும் கட்சிகள் தங்களுக்கு இடையில் ஏதோ ஓர் இணக்கத்துக்கு வரலாம் போன்ற கோரிக்கைகளை அவர் தொடர்ந்து முன்வைத்து வருகிறார். எனினும் அவ்வாறான இணக்கத்தை,ஒரு கூட்டை உருவாக்க முடியவில்லை. இப்பொழுதும் இந்தக் கூட்டில் அவர் அங்கம் வகிக்கிறார். அதேசமயம் அது தொடர்பாக அவர் தெரிவித்த ஒரு கருத்து மிகவும் தெளிவானதும் இந்த இணக்கத்தின் சாராம்சத்தை வெளியே கொண்டு வருவதுமாகும். மனோ கணேசன் பின்வருமாறு கூறினார் “இது மேடைதான் அரசியல் தேர்தல் கூட்டணி அல்ல”.

இப்படி ஓர் இணக்கம் ஐந்தாண்டுகளுக்கு முன் 2021 ஆம் ஆண்டும் அதன் பலவீனமான நிலையில் கருக்கட்டியது. அப்பொழுது அந்த இணக்க முயற்சிகளை முன்னெடுத்தது டெலோ அமைப்பு. யாழ்ப்பாணம், திண்ணை விருந்தினர் விடுதியில் நடந்த சந்திப்பின்போது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு அப்பால் சென்று அந்த நிலைப்பாட்டைக் கொண்டிராத தமிழ் பேசும் சமூகங்களை பிரதிபலிக்கின்ற கட்சிகளையும் இணைத்து ஒரு கூட்டை உருவாக்குவதற்கு திண்ணை சந்திப்பில் முயற்சிக்கப்பட்டது. ஆனால் அன்றைக்கு அந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கலந்து கொள்ளவில்லை. அந்தச் சந்திப்புக்களின் விளைவாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமானது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது ஆகும். அந்தச் சந்திப்பு அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்ந்து செல்லவில்லை. அதற்குப் பிரதான காரணங்களில் ஒன்று தமிழரசுக் கட்சி அதில் ஒத்துழைக்கவில்லை என்பது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 கட்சிகள் இணைந்து ஒரு பொதுத் தளத்தில் வேலை செய்வது என்று இணங்கி இருப்பதாக தெரிகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை இது நினைவுபடுத்துகிறது.

பத்திரிகையாளர்களுக்கு ஆறு கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த தகவல்களைத் தொகுத்துப் பார்த்தால், மூன்று முக்கிய விடயங்களின் மீது அவர்கள் கவனத்தைக் குவிப்பார்கள் என்று தெரிகிறது. முதலாவது, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வந்தால் அதை எப்படி இணைந்து எதிர்கொள்வது என்பது. இரண்டாவது, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது. மூன்றாவது, காணிப் பிரச்சினையும் உட்பட, தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளில் பொதுவான ஒரு நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய பொதுவான ஓர் இடையூடாட்டத் தளமாக அதனைப் பயன்படுத்துவது.

தமிழ் பேசும் கட்சிகள் தங்களுக்கிடையே பொதுவாக உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஏதோ ஓர் இணக்கத்துக்கு வர வேண்டியது அவசியம். இலங்கைத் தீவுக்குள் பிரிவினை அல்லாத ஏதாவது ஒரு தீர்வை தமிழ் மக்கள் நாடுவார்களாக இருந்தால் அது உச்சபட்ச சமஷ்டியாக இருந்தாலும் கூட, தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையில் உரையாடல் வேண்டும். தமிழ் பேசும் சமூகங்கள் தங்களுக்கு இடையே ஏதோ ஒரு பொது உடன்படிக்கைக்கு வரவும் வேண்டும். அந்த அடிப்படையில் இந்த முயற்சிகளை எடுத்த எடுப்பில் நிராகரிக்க தேவையில்லை.

இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய பேரவைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதற்குரிய விளக்கத்தை இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை முன்னெடுத்தவர்கள் தர வேண்டும்.

அதேசமயம், இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலப் பின்னணி தொடர்பில் இக்கட்டுரையின் முதல் பந்தியில் கூறப்பட்டதை சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். அந்த முதலாவது பந்தி மிகவும் நீண்டது. அதைத் தொடர்ச்சியாக வாசிக்கும் போது, பகுத்தறிவுள்ளவருக்கு ஒருவிடயம் இயல்பாகவே பொறி தட்டும். அது என்னவென்றால், ஒரு புதிய யாப்பை நோக்கியும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கியும் கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடும் கட்சிகளையும் சிவில் சமூகங்களையும் ஒருங்கிணைத்தும் எத்தனை முயற்சிகள் சமகாலத்தில் முன்னெடுக்கப்படுகின்றன? ஒரே நோக்கத்தை கொண்ட வெவ்வேறு முயற்சிகள். அத்தனை முயற்சிகளும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்துக்குள் இடம் பெறுபவை. இந்த எல்லா முயற்சிகளின் பின்னணியில்தான் இப்புதிய முயற்சியும் தொடக்கப்பட்டிருக்கிறது. ஆயின் இப்புதிய முயற்சியானது ஏற்கனவே தொடங்கப்பட்ட முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் நோக்கிலானதா? இல்லையா?

சிறிய மக்கள் கூட்டமாகிய தமிழ் மக்கள் மத்தியில் எத்தனை ஒருங்கிணைப்பு முயற்சிகள்? எத்தனை அரசியல் தளங்கள்? எத்தனை மேடைகள்? எத்தனை முன்மொழிவு முயற்சிகள்? எத்தனை பிரகடனங்கள்? எத்தனை தீர்மானங்கள்? எத்தனை உள்ளோட்டங்கள்? தனியோட்டங்கள்?

கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டிருக்கும் ஆறு கட்சிகளின் கூட்டு இப்படி பத்தோடு பதினொன்றாக மாறுமா? அல்லது தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையே பொதுவான விடயங்களை பேசி தீர்க்கும் ஒரு பயன் பொருத்தமான களமாக மாறுமா?

குறிப்பாக இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் தொடர்பாக கட்சித் தலைவர்கள் உத்தியோகபூர்வமாக தெரிவித்த தகவல்களின்படி ஒரு புதிய யாப்பை நோக்கி மேற்படி கட்சிகள் இணைந்து செயல்படும் விடயம் இதுவரை செல்லும்?

ஏற்கனவே 2015ல் இருந்து 2018 வரையிலும் அவ்வாறு இக்கட்சிகள் இணைந்து செயல்பட்டன. அதன் விளைவாக ஓர் இடைக்கால வரையும் உருவாக்கப்பட்டது. அது ஒற்றையாட்சித் தீர்வு என்றும், அதை அமுல்படுத்துவதுதான் சுமந்திரனின் உள்நோக்கம் என்றும் கஜேந்திரக்குமார் குற்றச்சாட்டுகிறார். அவ்வாறான ஒற்றையாட்சித் தீர்வை எதிர்ப்பதற்கான பிராந்தியச் சூழலை ஏற்படுத்தும் நோக்கத்தோடுதான் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டு தடவைகள் தமிழ்நாட்டுக்குச் சென்றிருக்கிறது.

அண்மை மாதங்களாக கட்சிகளும் பொதுமக்கள் அமைப்புகளும் முன்வைக்கும் பிரகடனங்கள், தீர்மானங்களில் ஒருவிடயம் பொதுவானதாகக் காணப்படுகிறது. அதுதான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமூக உடன்படிக்கை ஆகும். அதாவது இனங்களுக்கு இடையிலான ஒரு சமாதான உடன்படிக்கை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே இன்றுவரையிலும் ஒரு சமூக உடன்படிக்கை எழுதப்படவில்லை. கதிர்காமத்துக்கு பாதயாத்திரை போன சுப்பிரமணியனின் விடயத்தில் சமூக ஊடக வலைத்தளச் சூழலில் நிகழ்ந்த வெறுப்பு மிகுந்த வாதப்பிரதிவாதங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, இரண்டு சமூகங்களும் எந்த அளவுக்குப் பிளவுண்டிருக்கின்றன என்பதை உணர முடிந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது சமூகங்களுக்கிடையிலான அரசியல் உடன்படிக்கையில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை அதன் தீர்வு முன்மொழிவில் கூறியிருக்கிறது. தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும் அதனை ஏற்றுக் கொள்கிறது. தமிழ்த் தேசிய பெரு மன்றும் ஏற்றுக்கொள்கிறது. தமிழ் தேசிய பேரவையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இங்கே பிரச்சனை, அவ்வாறான ஒரு சமூக உடன்படிக்கைக்கான உரையாடல்கள் இதுவரை தொடங்கப்படவில்லை என்பதுதான். ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய அந்த இடையூடாட்டத் தளம் அவ்வாறான உரையாடல்களுக்குரிய ஒரு தளமாக விரிவடையுமா? தமிழ்த் தேசியப் பேரவையைத் தவிர்த்துவிட்டு அதைச் செய்யப் போகிறார்களா?

# மனிதக் கருவளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதினேழாவது நாள்




மனிதக் கருவளர்ச்சியில் பதினேழாவது நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மைல்கல்லாகும். இந்நிலையில் கருவின் நீளம் சுமார் 0.2 முதல் 0.4 மில்லிமீட்டர் மட்டுமே இருந்தாலும், மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும், திசுவும், உறுப்பு மண்டலமும் உருவாகத் தேவையான அடிப்படை உயிரியல் நிகழ்வுகள் மிகத் துல்லியமாக நடைபெறுகின்றன.

இந்தக் காலகட்டத்தில், இரண்டு அடுக்குகளைக் கொண்டிருந்த கருவட்டு (Bilaminar Embryonic Disc), மூவடுக்குக் கருவாக்கம் (Gastrulation) எனப்படும் அற்புதமான வளர்ச்சிச் செயல்முறையின் மூலம் மூன்று அடுக்குகளைக் கொண்ட கருவாக (Trilaminar Embryo) மாற்றமடைகிறது.

மனிதக் கருவியலில் இது மிக முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இதன் மூலமே மனித உடலின் அனைத்து உறுப்புகளும் திசுக்களும் தோன்றுவதற்கான அடிப்படையான புறக்கருவடுக்கு (Ectoderm), நடுக்கருவடுக்கு (Mesoderm), மற்றும் உட்கருவடுக்கு (Endoderm) ஆகிய மூன்று முதன்மைக் கரு அடுக்குகள் உருவாகின்றன.

## மூவடுக்குக் கருவாக்கம் - மூன்று முதன்மைக் கரு அடுக்குகளின் உருவாக்கம்

பதினேழாவது நாளில் மூவடுக்குக் கருவாக்கம் தீவிரமாக நடைபெறுகிறது. எபிபிளாஸ்ட் (Epiblast) அடுக்கிலுள்ள செல்கள் தொடக்கக் கோடு (Primitive Streak) வழியாக உள்நோக்கி இடம்பெயர்ந்து, முதலில் உறுதியான உட்கருவடுக்கை (Definitive Endoderm) உருவாக்குகின்றன. பின்னர் அவற்றின் ஒரு பகுதி கருவினுள் நடுக்கருவடுக்காக (Intraembryonic Mesoderm) மாறுகிறது. எஞ்சிய எபிபிளாஸ்ட் செல்கள் புறக்கருவடுக்காக (Ectoderm) நிலைபெறுகின்றன.

இந்தச் செயல்முறையின் விளைவாக, எளிமையான கருவட்டு, எதிர்காலத்தில் மனித உடலின் அனைத்து உறுப்புகளையும் உருவாக்கும் திறன் கொண்ட சிக்கலான மூவடுக்குக் கருவாக மாற்றமடைகிறது.

செல்களின் இந்தத் துல்லியமான இடமாற்றம் பல்வேறு மூலக்கூறு சமிக்ஞை அமைப்புகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதில் ஏற்படும் மிகச் சிறிய கோளாறுகள்கூட கடுமையான பிறவிக் குறைபாடுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

## தொடக்கக் கோடும் தொடக்கக் கணுவும்

பதினேழாவது நாளில் தொடக்கக் கோடு (Primitive Streak) மேலும் தெளிவாக உருவாகிறது. கருவின் பின்புற நடுக்கோட்டில் அமைந்துள்ள இந்த அமைப்பு, எபிபிளாஸ்ட் செல்கள் கருவின் உட்பகுதிக்குள் நுழைவதற்கான முக்கியப் பாதையாகச் செயல்படுகிறது.

இதன் முன்பகுதியில் அமைந்துள்ள தொடக்கக் கணு (Primitive Node), கருவின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் முக்கிய கட்டுப்பாட்டு மையமாகும். இது தலை-வால் அச்சு, இடது-வலது அமைப்பு மற்றும் முன்-பின் திசைகளை நிர்ணயிக்கிறது. இதன் விளைவாக, பின்னர் உருவாகும் அனைத்து உறுப்புகளும் தங்களுக்குரிய சரியான உடற்கூறியல் இடங்களில் அமைவதை இது உறுதிசெய்கிறது.

## முதுகுநாண் உருவாக்கம்

முதுகுநாண் நீட்சி (Notochordal Process) புறக்கருவடுக்கின் கீழ்பகுதியில் தலைப்பகுதியை நோக்கித் தொடர்ந்து வளர்கிறது. பின்னர் இதுவே முதுகுநாணாக (Notochord) உருவாகிறது.

முதுகுநாண், கருவின் வளர்ச்சியில் மிக முக்கியமான சமிக்ஞை மையமாகச் செயல்படுகிறது. இது நரம்புத் தட்டு (Neural Plate) உருவாகத் தூண்டுவதுடன், முதுகெலும்பின் வளர்ச்சியையும் சுற்றியுள்ள திசுக்களின் வேறுபாடுகளையும் கட்டுப்படுத்துகிறது.

கருவளர்ச்சி முன்னேறிய பின்னர் முதுகுநாணின் பெரும்பகுதி மறைந்துவிடுகிறது. இருப்பினும், அதன் எஞ்சிய பகுதி முதுகெலும்புகளுக்கு இடையேயுள்ள இடைத்தட்டின் மையப் பகுதியாக (Nucleus Pulposus) வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது.

## நடுக்கருவடுக்கின் ஆரம்ப வேறுபாடுறுதல்

பதினேழாவது நாளில் கருவினுள் நடுக்கருவடுக்கு (Intraembryonic Mesoderm) மூன்று முக்கியப் பகுதிகளாக வேறுபடத் தொடங்குகிறது.

- அச்சுப்பக்க நடுக்கருவடுக்கு (Paraxial Mesoderm)
- இடைநிலை நடுக்கருவடுக்கு (Intermediate Mesoderm)
- பக்கத்தட்டு நடுக்கருவடுக்கு (Lateral Plate Mesoderm)

இந்தப் பகுதிகளிலிருந்தே பின்னர் முதுகெலும்புத் தொடர், எலும்புத் தசைகள், இணைப்புத் திசுக்கள், சிறுநீரகங்கள், இனப்பெருக்க உறுப்புகள், இதயம், இரத்த நாளங்கள் மற்றும் உடற்சுவர் ஆகியவை உருவாகின்றன. எனவே, மனித உடலின் பெரும்பாலான கட்டமைப்புகளுக்கான அடித்தளத்தை நடுக்கருவடுக்கு அமைக்கிறது.

## ஆரம்பகால இருதய-இரத்த நாள மண்டல வளர்ச்சி

இந்த நாளில் இரத்த நாளங்களின் உருவாக்கம் (Vasculogenesis) வேகமாக முன்னேறுகிறது. ஆரம்பகால எண்டோதெலியல் செல்கள் (Endothelial Cells) ஒன்றிணைந்து முதல் இரத்த நாளங்களை உருவாக்குகின்றன.

அதே நேரத்தில், கருவுணவுப் பை (Yolk Sac) மற்றும் கருவினுள் உள்ள நடுக்கருவடுக்கில் இரத்தத் தீவுகள் (Blood Islands) தொடர்ந்து வளர்கின்றன.

இதயம் இன்னும் துடிக்கத் தொடங்கவில்லை என்றாலும், எதிர்கால இருதய-இரத்த நாள மண்டலத்திற்கான அடிப்படை அமைப்புகள் ஏற்கனவே உருவாகிக் கொண்டிருக்கின்றன.

## கருப்புறச் சவ்வுகளின் வளர்ச்சி

பனிக்குடக்குழி (Amniotic Cavity) தொடர்ந்து விரிவடைந்து, கருவின் வளர்ச்சிக்குப் பாதுகாப்பான திரவச் சூழலை வழங்குகிறது.

கருவுணவுப் பை (Yolk Sac) ஆரம்பகால ஊட்டச்சத்து வழங்குதல், முதல் இரத்த அணுக்களின் உருவாக்கம் மற்றும் முதன்மைக் கருவகச் செல்கள் (Primordial Germ Cells) தோன்றுதல் ஆகியவற்றில் தொடர்ந்து முக்கியப் பங்காற்றுகிறது.

பின்னர் தொப்புள் கொடியாக உருவாகும் இணைப்புக்காம்பு (Connecting Stalk), கருவையும் வளர்ந்து வரும் நஞ்சுக்கொடியையும் (Placenta) இணைக்கும் முக்கிய அமைப்பாக வலுவடைகிறது.

## மரபணு ஒழுங்குமுறை

பதினேழாவது நாளில் கருவின் வளர்ச்சி மிகவும் துல்லியமான மரபணுக் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறுகிறது.

BMP, WNT, FGF மற்றும் Nodal போன்ற சமிக்ஞை மூலக்கூறுகள் செல்களின் இடமாற்றம், திசுக்களின் வேறுபாடுறுதல் மற்றும் உடலின் அடிப்படை அச்சு உருவாக்கம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகின்றன.

இந்த மூலக்கூறு செயல்பாடுகளே எதிர்காலத்தில் உருவாகும் கோடிக்கணக்கான செல்கள் சரியான இடத்திலும் சரியான காலத்திலும் சிறப்புப் பணிகளுக்குரிய திசுக்களாகவும் உறுப்புகளாகவும் மாறுவதை உறுதிசெய்கின்றன.

## மருத்துவ முக்கியத்துவம்


பதினேழாவது நாள் மருத்துவக் கருவியலில் மிகவும் முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும். இந்தக் காலத்தில் நடைபெறும் மூவடுக்குக் கருவாக்கத்தில் ஏற்படும் கோளாறுகள் வால்முனை வளர்ச்சிக் குறைபாடு (Caudal Dysgenesis), உறுப்புகளின் இடவமைப்புக் குறைபாடுகள் (Laterality Defects) மற்றும் பல்வேறு உறுப்பு மண்டலங்களைப் பாதிக்கும் பிறவிக் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடும்.

மனித உடலின் அனைத்து திசுக்களும் உறுப்புகளும் இந்த மூன்று முதன்மைக் கரு அடுக்குகளிலிருந்தே தோன்றுவதால், இக்கட்டத்தில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடுகள் வாழ்நாள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

இந்தக் கருவியல் நிகழ்வுகளைப் பற்றிய ஆழமான அறிவு மருத்துவர்கள், கருவியலாளர்கள், உடற்கூறியல் நிபுணர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு பிறவிக் குறைபாடுகளின் தோற்றத்தையும் மனித வளர்ச்சியின் அறிவியல் அடிப்படையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

## முடிவுரை

மனித வாழ்வின் பதினேழாவது நாள் கருவளர்ச்சியின் மிக முக்கியமான கட்டங்களுள் ஒன்றாகும். இந்த நாளில் கரு, எளிய செல் அமைப்பிலிருந்து மூன்று முதன்மைக் கரு அடுக்குகளைக் கொண்ட, உடலின் அடிப்படை அச்சு உருவாகத் தொடங்கிய, முதுகுநாண் உருவாகிக் கொண்டிருக்கும், மேலும் இருதய-இரத்த நாள மண்டலம் மற்றும் தசை-எலும்பு மண்டலங்களின் ஆரம்ப அடித்தளங்கள் அமைந்துள்ள மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட உயிரியல் கட்டமைப்பாக மாற்றமடைகிறது.




கண்ணுக்குப் புலப்படாத அளவிற்கு மிகச் சிறிய இந்தக் கருவில் நடைபெறும் நிகழ்வுகளே, பின்னர் முழுமையான மனித உடலின் அனைத்து உறுப்புகள், திசுக்கள் மற்றும் உடலியல் மண்டலங்களின் வளர்ச்சிக்கான அடிப்படை வரைபடத்தை உருவாக்குகின்றன. எனவே, மனித வாழ்வின் பதினேழாவது நாள், ஒரு கருவுற்ற முட்டையிலிருந்து முழுமையான மனிதனாக உருவாகும் அற்புதப் பயணத்தின் மிக முக்கியமான மற்றும் அறிவியல் ரீதியாக வியப்பூட்டும் மைல்கற்களில் ஒன்றாக விளங்குகிறது.

*எழுதியவர்: ஈழத்து நிலவன்*
*மருத்துவமனை விசேட மருந்தியல் நிபுணர்*
*அரச மருத்துவ ஆராய்ச்சியாளர்*

# மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சிந்தனையைத் தூண்டும் திரை இசைப் பாடல்கள் ஓர் அழகியல் மெய்யியல் பார்வை

(சென்ற வார தொடர்ச்சி)

இப்பாடல் கவியரசர் கண்ணதாசன் தான் எழுதுவதாக இருந்தது. வழமைபோல கவியரசர் கண்ணதாசன் எம்ஜிஆருக்குத் தான் பாட்டேழுத காலை 9 மணிக்கு வருவதாகக் கூறி, பகல் பன்னிரண்டு மணிக்குத் தான் வந்தார். அதற்கு முன் பட்டுக்கோட்டை கல்யாணசுசந்தரம் எட்டு மணிக்கே வந்துவிட்டார். ஆதலால், எம்ஜிஆர் நேரத்தைப் போக்காமல், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தையே பாட்டை எழுதும்படி கூறியிருந்தார். பிந்திவந்த கவியரசரிடம் இப்பாடலைக் கொடுத்து எம்ஜிஆர் சரிபார்க்கச் சொல்லிக் கொடுத்தபோது, கவியரசரின் முகம் வாடியிருந்ததோடு, தான் இனிமேல் தாமதமாக வரும் பழக்கத்தை மாற்றிக்கொள்கிறேன் என்று எம்ஜிஆரிடம் ஒப்புக் கொண்டார். இதனைவிட, வறுமையை ஒழிக்கும் பல பாடல்களையும் சமூக சீர்திருத்தப் பாடல்களையும் எம்ஜிஆருக்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியிருக்கிறார். அவற்றுள் தேர்ந்தெடுத்த சில பாடல் வரிகளையே குறிப்பிட முடியும். இல்லாயாயின் கட்டுரை நீண்டுவிடும்.

கௌரவக் காதல், தமிழன் மானம், வறுமை ஒழிப்பு எல்லாவற்றையும் தனது திரை இசைப் பாடல்களில் அடக்கி இயற்றினார்.

உதாரணத்துக்கு இன்னும் சில பாடல்களைக் குறிப்பிடலாம்.

அரசிளங்குமரி படத்தில் "ஏற்றமுன்னா ஏற்றம் இதிலேயிருக்குது முன்னேற்றம்" என்ற பாடலில் வரும் வரிகள், "விதியை எண்ணி வீழ்ந்து கிடக்கும் வீணரெல்லாம் மாறணும். வேலை செய்தால் உயர்வோமென்ற விபரம் மண்டையில ஏறணும்", அத்தோடு மனிதனுக்குப் படிப்பும் உழைப்பும் தேவை என வலியுறுத்தினார். அத்தோடு நிரந்தரமாக சகலமுமே சுதந்திரமா வாழணும் என்கிறார். அடுத்த முக்கியமாக எம்ஜிஆரின் புகழை உயர்த்திய பாடல், "சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா - நான் சொல்லப் போற வார்த்தையை நல்லா எண்ணிப் பாரடா" எனத் தொடங்கும் பாடலில், "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி" என்னும் வரிகளும் "தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா - தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா" என்னும் வரிகள் மூலம் தான் நம்பிய பொதுவுடைமைத் தத்துவத்தை வெளிப்படுத்துவதனையும் "வேப்பமர உச்சியில் நின்னு போயொண்ணு ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க" வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக் கூட நம்பிவிடாதே - நீ வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பி விடாதே" என்று மூடப் பழக்கங்களை நம்பி இளைஞர்கள் முடங்கிக் கிடக்கக்கூடாது என எச்சரிக்கிறார்.

இவ்வாறு சமூகநலக் கருத்துக்களை எம்ஜிஆர் முதலில் பாடி நடிக்கச் செய்து, அவரது வாழ்க்கையை மாற்றி மக்கள் மனத்தில் நீங்காத இடம் பிடிக்கச் செய்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இவ்வாறு மேலே நாம் பார்த்த எம்ஜிஆரின் கொள்கைப் பாடல்களை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதினார்.

"உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனை குணம், உருப்படியாய் உள்ளதையும் அழிப்பது குரங்கு குணம், ஆற்றில் இறங்குவோரைக் கொன்று தின்பது முதலை குணம், இவை அத்தனையும் மனிதனிடம் மொத்தமாய்க் காணுவது பிறக்கும்போது இருந்த குணம். போகப் போக மாறுது, ஆனால் இறக்கும்போது ஒன்றாய் சேருது" என்னும் பாடலில் மனித பலவீனத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

இவ்வாறு தனது பாடல்கள் மூலம் எம்ஜிஆரின் புகழை உயர்த்தியதோடு தனது புலமையையும் வெளிப்படுத்தினார். நான் இரசித்த, தேர்ந்தெடுத்த சிந்தனையைத் தூண்டும் மக்கள் கவிஞரின் சில முக்கிய திரை இசைப் பாடல்கள்

நான் ஒரு அழகியல் கலாமெய்யியல் மாணவன் என்பதால், நான் இரசித்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் இரசனையியல் பாடல்கள் ஏராளம். அவற்றுள் சிலவற்றைப் பின்வரும் பந்திகளில் சற்று விபரமாகப் பார்ப்போம்.

உதாரணத்துக்கு ஒரு சில பாடல்களைத்தான் என்னால் குறிப்பிட முடியும். ஏனெனில், கட்டுரை நீண்டு விடும். முதலாவதாக, அவரது எதிர்காலத்தை நம்பிக்கையூட்டும் பாடலோடு ஆரம்பிப்போம்.

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி
பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங் காலமுண்டு - அதை நம்பிடுவோம்
சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச் சாமி மறந்தாலும்
பூமி தந்திடும் தகுந்த பலன் - இதைப்
பாடப் பாட விளையாடி ஆடிப்பல
கோடிக்கோடி முறை கும்பிடுவோம்
காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர். அத்தோடு பொதுவுடைமைக் கருத்துக்களை தாம் இயற்றிய திரை இசைப் பாடல்களில் புகுத்தினார். குறிப்பாக அவரது சம்பாசணை வடிவில் அமைந்த பாடல்கள் எமது சிந்தனையைத் தூண்டுவன.

சுயமரியாதையோடு திரை இசைப் பாடல் துறையில் நிமிர்ந்து நின்று, தனது பொதுவுடைமைக் கருத்துக்களை பாடல் வரிகளில் நிலைநிறுத்தி நிமர்ந்து நின்றவர். இதற்கு, அவரது வாழ்க்கை வரலாற்றில் பல சம்பவங்கள் உண்டு.

1960இல் அவரெழுதிய பின்வரும் பாடல் சிறந்த எடுக்காட்டாகும். அதாவது, பலரும் பட்டுக்கோட்டையை தி.மு.க. அங்கத்தவரென்று தவறாகக் கணக்கிடுவார்கள். உண்மையில் அவரொரு பொதுவுடைமைவாதி என்பதை அவர் அறிஞர் அண்ணாவை "திண்ணைப் பேச்சு வீரரிடம் ஒரு கண்ணா இருக்கணும் அண்ணா" என்னும் பாடலில், தி.மு.க. கொள்கையை விமர்சிப்பதைக் காணலாம். அத்தோடு, அப்பாடலில் அவர்களது கடவுள் எதிர்ப்புக் கொள்கையைப் பின்வரும் வரிகளில் "கடவுளிருப்பதும் இல்லை என்பதும் கல்லைக்குதவாத கருத்து என விமர்சிக்கின்றார். அத்தோடு ஊருக்கெல்லாம் ஒரே சாமி, ஒரே சாதி, யாரு மேலே கீறினாலும் ரத்தம் ஒண்ணுதானே ஆக மொத்தம் பிறந்ததெல்லாம் பத்து மாதம் தானே" என்று பட்டுக்கோட்டை தனது பாடல் வரிகளின் மூலம் வள்ளுவரின், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொல்லா செய்தொழில் வேற்றுமையால்" என்னும் குளறையும் திருமூலரின் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதையும் தமிழனின் பரந்துபட்ட உலகளாவிய அன்பைப் பிரதிபலிக்கும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் உலக தத்துவத்தையும் இப்பாடலின் மூலம் பிரதிபலித்து, தானும் தனித்துவமானவன் என்பதைப் புரியவைக்கிறார்.

அத்தோடு, பல காலத்தால் அழியாத தத்துவப் பாடல்களையும் பாடியுள்ளார்.

எம்ஜிஆரின் படமான சக்கவர்த்தி திருமகன் படத்துக்கு எழுதிய "மனிதன் பிறக்கும்பாது இருந்த குணம் போகப் போக மாறுது என்னும் பாடலும் குறுக்கு வழியில் பொருளைத் தரும் கொள்ளை உலகம் என்னும் பாடலும்

நிலையாமையை உணர்த்தும் "குட்டியாடு தப்பி வந்தால் குள்ள நரிக்குக் கொண்டாட்டம், குள்ளநரி மாட்டிக்கிட்டால் குறவனுக்குக் கொண்டாட்டம், தட்டுக்கெட்ட மனிதன் கண்ணில் பட்டதெல்லாம் சொந்தம், உனக்கேது சொந்தம் எனக்கேது சொந்தம் என்னும் பாட்டில், வரும் வரிகளான, "காலை நீட்டியே வாய்க்கரிசி போடும்போது வாழ்வின் ஆசை, பாசம் எல்லாத்தையும் இழத்தல்" மிகவும் கவனிக்கத்தக்க நிலையாமையை விளக்கும் பாடலாகும். என்னை மிகவும் கவர்ந்த இக்கால விலைவாசிகளுக்கும் பொருந்தக்கூடிய ஏழைகளின் வாழ்வைச் சித்தரிக்கும் பாடலான (இரும்புத் திரை) கையிலே வாங்கினேன் பையிலே போட்டேன், காசு போன இடம் தெரியல, என்னும் பாடல் வரிகள், அகில உலக ரீதியில் ஏழைகள் பண வீக்கத்தால் படும் கஷ்டத்தை 60 ஆண்டுகளுக்கு முன்பே பட்டுக்கோட்டை தீர்க்கதரிசனமாகப் பாடியதை வியக்காமல் இருக்க முடியாது.

இவ்வாறு பல பாடல்களை தனது குறுகிய கால, 5 ஆண்டு கலைப்பயணத்தில் முத்திரை பதித்த, காலத்தால் அழியாத முத்திரைக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், பல விருதுகளைப் பெற்று பாட்டாளி மக்கள் கவிஞராக இன்னும் உயர்ந்து நிற்கின்றார்.

மாமேதை விளாடிமிர் லெனின் கூறிய கலை இலக்கியம் பாட்டாளி மக்களின் பிரச்சினைகளையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்க வேண்டும் என்னும் கலை மக்களக்கானது என்னும் பொதுவுடைமைக் கோட்பாட்டுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். எந்த நிலையிலும் பணத்துக்காக தனது கொள்கையிலிருந்து விலகாத பாட்டாளி மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்றால் அது மிகையாகாது.

நான் ஒரு முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதாலும் கல்வியாளர் என்பதாலும் பட்டுக்கோட்டையின் இப்பாடல் என்னை மிகவும் கவர்ந்த இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் "துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும்". இதனையே திருவள்ளுவரும் தமது குறளில் கல்வியின் நோக்கம் என்ன என்பதை, "கற்கக் கசடறக் கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்று தெளிவாகக் கூறுவதை, மக்கள் கவிஞர் இந்தத் திரை இசைப் பாடலில் பிரதிபலிப்பதை அவதானித்தல் வேண்டும். இனி, மக்கள் கவிஞரின் பாடலை விரிவாகப் பார்ப்போம். இப்பாடல், "ஏட்டுப் படிப்பு" என்னும் தலையங்கத்தில் அமைந்துள்ளது.

"ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே - நீ
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே
நாட்டின் நெறி தவறி நடந்து விடாதே - நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே
மூத்தோர் சொல்வார்த்தைகளை மீறக்கூடாது - பண்பு
முறைகளிலும் மொழிகளிலும் மாறக் கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக்கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன்சேரக்கூடாது - நீ
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான் முகட்டைத் தொட்டிட வேணும்
வெற்றிமேல் வெற்றி வரப் பெருமை வர
மேதைகள் சொன்னது போல் விளங்கிட வேணும்
பெற்ற தாயின் புகழும், நீ பிறந்த
மண்ணின் புகழும் - வற்றாமல்
உன்னோடு வளர்ந்திட வேணும்"

இறுதியாக, நடிகை பண்டரிபாய்க்கு எழுதிய அவரது பாட்டின் பல்லவியோடு இச்சிறிய கட்டுரையை முடிக்கிறேன்.

"போனா எவனும் வரமாட்டான்
தாகு எவனும் கெடமாட்டான்
தடுக்கிவிடாமல் விழமாட்டான்
போனா எவனும் வர மாட்டான் - மேலே
போனா எவனும் வாரமாட்டான்
இதைப் புரிஞ்சுக்கிட்டா அவன் அழமாட்டான்"

இவ்வுலகில் 29 ஆண்டு காலம் மட்டுமே வாழ்ந்து, என்றும் நிலைத்து நிற்கும் எளிய பாடல்கள் மூலம் சமுதாயப் பிரச்சினைகளைப் பாடி, மக்கள் நெஞ்சங்களில் நிறைந்த இணையிலாப் புகழ் படைத்தவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்கிறார் வள்ளுவர்.

**K. ANANTHANATHAN, MA, MSW, RSW**
**Registered Social Worker & Psychotherapist with**
**Ontario College of Social Workers and Social Services Workers (OC-SWSSW)**
**Contact 289 – 396 – 8459 Email : kananthan2003@gmail.com**

உலக செய்திகள் World News

# சென்னையில் பொ. ஐங்கரநேசனின் "வேர்முகங்கள்" வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது



தமிழகத்தில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ள பொ. ஐங்கரநேசனின் "வேர்முகங்கள்" நூலின் வெளியீட்டு விழா சென்னையில் நடை பெற்றுள்ளது.

பொ. ஐங்கரநேசன் செவ்வி கண்ட கலை, இலக்கிய ஆளுமைகள் 19 பேரின் நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பை வேர்முகங்கள் என்ற பெயரில் சாளரம் பதிப்பகம் 2006ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது. கடந்த 2025 ஆம் ஆண்டு மேலும் புதிதாக ஒரு இலக்கிய ஆளுமையின் நேர்காணலை உள்ளடக்கி 20 நேர்காணல்களின் தொகுப்பாக யாழ்ப்பாணத்தில் "எங்கட புத்தகங்கள்" என்ற பதிப்பகம் வெளியிட்டிருந்தது. தற்போது வேர்முகங்கள் நூலை 3ஆவது வெளியீடாக சென்னையில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதற்கான வெளியீட்டு விழா கடந்த யூலை 8ம் திகதி புதன்கிழமை (08.07.2026) அண்ணா நூற்றாண்டு நூலக நூல் வெளியீட்டுக் கட்டட அரங்கில் இடம் பெற்றது.

பதிப்பாளர் வைகறைவாணனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இயக்குநரும் நடிகரும் படைப்பாளியுமான கவிதா பாரதி வெளியிட்டு வைக்க, ஓவியர் டிராட்ஸ்கி மருது முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூல் தொடர்பான கருத்துகளை காமராஜர் மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா. சுப்பிரமணியன், படைப்பாளியும் ஊடகவியலாளருமான ந. சுந்தரபுத்தன், வரலாற்று ஆய்வாளர் பழ. அதியமான் ஆகியோர் ஆற்றியிருந்தார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியின் நூலாசிரியரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் ஏற்புரையை நிகழ்த்தினார்.

இத் தொகுப்பில் கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி நா. சுப்பிரமணியன், பாரதிராஜா, சுஜாதா, டிராட்ஸ்கி மருது, சா. கந்தசாமி, மணவை முஸ்தபா, செங்கை அழியான், தி.சு. சதாசிவம். த. ஜெயகாந்தன், அறிவுமதி, டி திலீப்குமார், சு. வில்வரத்தினம், பாரதிபுத்திரன், புதுவை இரத்தினதுரை, கலாநிதி பரமு. புஸ்பரட்ணம், இ. பத்மநாபஐயர், ஞானரதன், இன்குலாப், கி.பி. அரவிந்தன் ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த இருபது கலை இலக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்பெறும் படங்கள் சென்னை விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அடர்ந்த கானகத்தைக் கடந்து பாதயாத்திரையில் ஈடுபட்ட பக்தர்கள் கதிர்காமத்தை சென்றடைந்தனர்

கனகராசா சரவணன்



நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடர்ந்த காடுகள் மற்றும் கரடுமுரடான வழியூடான புனித பாதயாத்திரையை மேற்கொண்ட பக்தர்களில் முதலாம் குழுவினர் 15ம் திகதி அன்று புதன்கிழமை அதிகாலை கதிர்காமத் திருத்தலத்தை சென்றடைந்துள்ளனர்.


வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம ஆடிவேல் விழாவை முன்னிட்டு, கடந்த 10 ஆம் திகதி உகந்தை மற்றும் குமண தேசிய பூங்காவிலிருந்து யாழ ஓடா ஊடாக கதிர்காமம் வரையான காட்டுப் பாதை பக்தர்களின் வழிபாட்டிற்காகத் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டிருந்தது.



முதியவர்கள், சிறியவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் எனப் பலரும் அடங்கிய இப்பாதயாத்திரைக் குழுவினர், அடர்ந்த கானகம், மேடு, சேறு மற்றும் முள் நிறைந்த ஒற்றையடிப் பாதைகளையும், கிரவல் மண் பாதைகளையும் கடந்து தமது நேர்த்திக்கடனை நிறைவு செய்துள்ளனர். வனமுறை வேடன் அருளிய பாரம்பரிய பூஜை முறைகளைப் பின்பற்றி, கானகத்திலும் வழிபாடுகளை முன்னெடுத்து வந்த பக்தர்கள் புதன் அன்று ஆலயத்தை வந்தடைந்ததும் பக்தி பரவசத்துடன் கூட்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதனிடையே, ஆடிவேல் விழாவின் முதலாவது வரலாற்றுச் சிறப்புமிக்க திருவீதி உலா பெரஹரா அன்று இரவு வெகுவிமரிசையாக நடைபெற்றது.

தொடர்ந்து 15 நாட்கள் பக்திபூர்வமாக நடைபெறவுள்ள இத்திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வான தீர்த்தோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை புனித மாணிக்க கங்கையில் நடைபெற்று, இவ்வாண்டிற்கான ஆடி வேல் விழா மங்களகரமாக நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

## அஹ்சானுல் ஹாஃபிஸ்

ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association

LIBERAL

# AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24



கனடிய செய்திகள்
Canadian News

## "BECOMING: A JOURNEY TO WHOLENESS"
## A Dance Evening presented by 'Shakti Narthanalayam' - Toronto

# "சக்தி நர்த்தனாலயம்" வழங்கிய "முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்" நாட்டிய நிகழ்ச்சி பல உணர்வுகளை வெளிக்காட்டியது










ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரின் "சக்தி நர்த்தனாலயம்" வழங்கிய "முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்" நாட்டிய நிகழ்ச்சி க டந்த 12-07-2026 ஞாயிற்றுக்கிழமை யோர்க்வுட் நூலக கலையரங்கில் நடைபெற்றபொது மண்டபம் நிறைந்த நடன ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பல உணர்வுகளை வெளிக்காட்டியது மட்டுமன்றி அவசியமான ஒரு நோக்கத்திற்கான ஒரு மேடை என்பதை வெற்றிகரமாக காட்டியது என்றும் கூறலாம்.

அன்றைய நிகழ்வுகளை திருமதி வான்ஜிதா சுஜந்தன் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரின் "சக்தி நர்த்தனாலயம்" நடனப் பள்ளியின் சிரேஸ்ட மாணவியான செல்வி மிசெல் நிருஷியா கொட்வின் பிரதான நடனத் தாரகையாக விளங்க அன்றைய தினம் நடனப் பள்ளியின் அடுத்த நிலை மாணவ-ிகளும் பங்கெடுத்த இந்த நடன மேடையும் முழுதான நடன நிகழ்ச்சியும் குருவின் திறமையையும் பிரதான நடனத் தாரகையின் பயிற்சியின் அர்ப்பணிப்பையும் ஏனைய நடனச் செல்விகளின் அபாரமான நடனப் பயிற்சியையும் குருவின் வழிகாட்டலை பின்பற்றிய நேர்த்தியையும் எடுத்துக் காட்டின என்றால் மிகையாகாது.

நடன நிகழ்வின் பிரதம விருந்தினராக நடன ஆசிரியை அற்புதராணி கிருபைராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் விசேட விருந்தினராக அர்த்தமி சிவா குருவிந்த் அவர்களும் கலந்து சிறப்பித்து அன்றை நடன நிகழ்வின் நோக்கம் மற்றும் குருவின் திறமை மற்றும் ஆழமான பார்வை அத்துடன் பிரதான நடனத் தாரகை செல்வி மிசெல் நிருஷ ியா கொட்வினின் அர்ப்பணிப்பு மற்றும் நல்லதொரு நோக்கத்தோடு சிறந்த ஒரு கருப்பொருளை தனது பிரதன நடனத்தில் இணைத்துக் கொண்டமை போன்ற பல விடயங்களை உள்ளடக்கி தங்கள் வாழ்த்துரைகளை வழங்கியும் பாராட்டியும் அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியும் மகிழ்ச்சியோடு விடைபெற்றனர்.

மண்டபத்தை நிறைத்து அன்றைய நடன மேடையை பெருமைப் படுத்திய அனைவருக்கும் "சக்தி நர்த்தனாலயம் நிறுவன அதிபர் ஜனனி ரவிசங்கர் மற்றும் செல்வி மிசெல் நிருஷியா கொட்வினின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் அனைவரும் தங்கள் நன்றியை தெரிவித்தனர்.


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |


முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5




# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் "நூல்களின் சங்கமம்" என்னும் நூல் கண்காட்சி!

கனடாவில் கடந்த 33 வருடங்களாக வெற்றிகரமாகவும் தொடர்ச்சியாகவும் இயங்கிவருகின்ற கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஏற்பாடு செய்துள்ள "நூல்களின் சங்கமம்" என்னும் புத்தகக் கண்காட்சி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று கனடா - ஸ்காபுறோவில் நகரில் நடைபெறுகின்றது.

மேலதிக விபரங்களை இங்குள்ள விளம்பர அறிவித்தலைப் பார்க்கவும்.







கனடிய செய்திகள் Canadian News

## Ontario Liberal Candidate for Scarbrough Southwest, Ahsan-ul-hafiz visited Canada Kanthaswamy Temple and was blessed by Priests!

# கனடா கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்றிருந்த ஸ்காபுறோ தென்மேற்கு மாகாணத் தொகுதிக்கான லிபரல் கட்சி வேட்பாளர் அசனுக்கு குருமார் ஆசி வழங்கினர்!



விரைவில் நடைபெறவுள்ள ஒன்றாரியோவின் ஸ்காபுறோ தென் மேற்கு (Scarbrough Southwest) தொகுதிக்கான இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற அசன் அல் ஹவிஸ் அவர்கள் (Candidate Ahsan-ul-hafiz) அண்மையில் அதே தொகுதியில் உள்ள கனடா கந்தசுவாமி ஆலயத்திற்கு ஆசி பெறுவதற்காகச் சென்றிருந்தார்.



அங்கு அவரை வரவேற்ற ஆலயத்தின் நிர்வாக சபையினரும் ஆலயக் குருக்கள்மாரும் காளாஞ்சி வழங்கி அவருக்கு ஆசி வழங்கினர். மேற்படி சந்திப்பு தொடர்பாக தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த பொழுது கனடா கந்தசுவாமி ஆலயமானது தமிழ் மக்களின் ஒரு அடையாளமாக இந்த தொகுதியில் திகழ்கின்றது என்றும் இந்த ஆலயம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் அவற்றை தீர்த்து வைப்பதற்கு என்னால் ஆன ஆதரவை வழங்குவேன் என்று தெரிவித்தார்.

இங்கு காணப்பெறும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

## Student of Canada's 'Naatiya Kalakshetra Academy of Dance' Sabrena Thayananda's Bharathanatya Arangetram was very graceful

# கனடா நாட்டிய கலாக்ஷேஸ்த்திரா நடனப் பள்ளி மாணவி சபரீணா தயானந்தாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது




கனடா - நாட்டிய கலாக்ஷேஸ்த்திரா நடனப் பள்ளியின் நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி தேனுஜர் திருமாறன் அவர்களின் மாணவி சபரீணா தயானந்தாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 05-07-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோ சீனக்கலாச்சார மண்பத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அரங்கேற்றத்தின் தொகுப்பாளர்களாக ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்கள் செல்வி திருநேற்றா சபேசனும் பணியாற்றினார்கள்.

கனடாவின் புகழ்பெற்ற அணிசேர் கலைஞர்கள் வாய்ப்பாட்டு - மிருதங்கம். வயலின். புல்லாங்குழல் ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த இசைப்பிரிவுகளில் தங்கள் ஆற்றலை இசை வடிவங்கள் ஊடாக நேர்த்தியாக வழங்கவும் நாட்டியச் செல்வி சபரீணாவின் குரு தேனுஜா திருமாறன் அவர்களின் அர்ப்பணிப்புள்ள நட்டுவாங்கத்தோடு இணைந்து அரங்கேற்றம் நேர்த்தியாக நகர்ந்து சென்றது.

மண்டபம் நிறைந்த அரங்கேற்றமாக நடைபெற்ற இந்த விழாவின் பிரதம விருந்தினராக நடன ஆசிரியை அற்புதராணி கிருபைராஜ் அவர்கள் அழைக்கப் பெற்றிருந்தார்.





அரங்கேற்றத்தின் முதலாவது உருப்படியான புஸ்ப்பாஞ்சலி தொடக்கம் அனைத்து உருப்படிகளையும் நாட்டியச் செல்வி சபரீணா அவர்கள் தான் குருவிடம் கற்றுக் கொண்டது மற்றும் அரங்கேற்றத்தையொட்டிய சிறப்புப் பயிற்சிகள் மூலமாக தான் பெற்ற தெளிவான நுணுக்கங்களை அன்றை அரங்கேற்றத்தில் சமர்ப்பணம் செய்தார் என்பதும் பிரதம விருந்தினர் தனது உரையில் குறிப்பிட்டது எதிர்காலத்தில் அரங்கேற்றச் செல்வி சபரீணா அவர்கள் இன்னும் பல நுணுக்கங்களைக் கற்று சிறந்த நர்த்தகியாக விளங்குவார் என்ற நம்பிக்கையை இந்த அரங்கேற்றத்தை கண்டு களிக்க வந்தவர்களுக்கு தந்தது என்றால் அது மிகையாகாது.





*- Uthayan LJI Journalist Arjune -*

# அநுரவின் 'மௌன' அரசியலும் நீதியின் புதைகுழியாகும் செம்மணியும்!



***"ராஜபக்சக்கள் விடயத்தில் "ஒரு குடும்பத்திற்காக இராணுவத்தில் உள்ள ஏதாவது ஒரு குழு செயற்பட்டிருந்தால் இராணுவத்தினர் என்று கூடப்பாராமல் தண்டனை வழங்குவோம்" என்று சூளுரைத்துள்ள ஜனாதிபதி அநுரகுமார, தமிழர்கள் விடயத்தில் ஒரு இனத்திற்கே எதிராக செயற்பட்டு செம்மணிப் படுகொலைகள் செய்த இராணுவத்தினர் தொடர்பில். அந்தப்படுகொலைகள் தொடர்பில் மௌனம் காப்பது தமிழினத்திற்கு எதிராக இராணுவம் செயற்பட்டிருந்தால் அது குற்றமல்ல என்ற நிலைப்பாட்டிலா?"***

**கே.பாலா -**

**யா**ழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி கடந்த 15 ஆம் திகதி காலை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக மொத்தம் 56 நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. 32 நாட்கள் அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த நிலையில், கடந்த ஜூன் 23ஆம் திகதியுடன் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையிலேயேகடந்த 15 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீண்டும் தமிழர்களின் எலும்புக்கூடுகள் வெளிவரத்தொடங்கியுள்ளன.


செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப்பணி கடந்த ஆண்டு மே 15 ஆம் திகதி ஆரம்பமாகி, 9 நாட்கள் நடைபெற்றபோது 19 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இரண்டாம் கட்ட அகழ்வுப்பணி கடந்த ஆண்டு ஜூன் 26 முதல் செப்டெம்பர் 3ஆம் திகதி வரை 45 நாட்கள் நடைபெற்ற நிலையில், முதலாம் கட்டத்தில் கண்டெடுக்கப்பட்டவை உட்பட மொத்தம் 240 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. மூன்றாம் கட்ட அகழ்வுப்பணி கடந்த ஏப்ரல் 27 முதல் மே 9 வரை 12 நாட்களும், ஜூன் 1 முதல் ஜூன் 23 வரை 22 நாட்களும் இடம்பெற்றன. இதில் மே மாதம் மட்டும் 21 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதன்படி, இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் செம்மணி மனிதப்புதைகுழிகளிலிருந்து மொத்தம் 412 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதில் 409 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையிலேயே மீண்டும் அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் உள்நாட்டு யுத்த வரலாற்றில், மனித உரிமை மீறல்களின் ஆகப்பெரும் சாட்சியாகவும், நீதிக்கான தேடலின் தீராத வடுக்கள் நிறைந்த பூமியாகவும் விளங்குவது யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதி. 90களின் பிற்பகுதியில் வெளிச்சத்திற்கு வந்த செம்மணி மனிதப்புதைகுழி, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்ததோடு, பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தின் குறியீடாகவும் மாறியது.

1995 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த காலத்தில், நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டனர். அவ்வாறு இராணுவக் காவலில் படுகொலை செய்யப்பட்டவர்கள் செம்மணிப் பகுதியில் உள்ள உப்பளங்கள் மற்றும் வெளிகளில் இரகசியமாகப் புதைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட "சோமரத்தின ராஜபக்ச" என்ற இலங்கை இராணுவ லான்ஸ் கோப்ரல், செம்மணியில் 300 முதல் 400 தமிழர்களின் உடல்கள் இராணுவத்தால் புதைக்கப்பட்டுள்ளன என்றும், தனக்கு அந்த இடங்கள் தெரியும் என்றும் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்த போதே இந்த விவகாரம் 1998 இல் முதன்முதலில் உலகிற்குத் தெரியவந்தது.

சோமரத்தின ராஜபக்சவின் வாக்குமூலத்தைத் தொடர்ந்து, சர்வதேசக் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் செம்மணியில் முதன்முதலில் நீதிமன்ற உத்தரவின் பேரில் அகழ்வுப் பணிகள் நடத்தப்பட்டன. அப்போது அங்கு 15 உடல்களின் எச்சங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. முறையான தொடர் விசாரணைகள் இன்றி அந்த வழக்கு பின்னர் கிடப்பில் போடப்பட்டது.




இருப்பினும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செம்மணி - சித்துபாத்தி மயானப் பகுதியில் மின் மயானம் அமைப்பதற்காகக் குழி தோண்டியபோது மீண்டும் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் பேரில் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகளின் முன்னிலையில் பெரிய அளவிலான புதிய அகழ்வுப் பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் வரை தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

1999 இல் மீட்கப்பட்ட 15 மனித உடல் எச்சங்களைத் தவிர்த்து, 2025 இல் தொடங்கி தற்போது வரை நடைபெற்று வரும் புதிய மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளின் மூலம் மொத்தம் 412 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளன. இதுவே இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ளது.

ஆனால் ஆண்டுகள் பல கடந்தும், ஆட்சிகள் பல மாறியும், "நல்லாட்சி" மற்றும் "மாற்றம்" என்ற முழக்கங்களுடன் ஆட்சிபீட மேறிய அரசுகள் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாள்கின்றன என்பது எப்போதும் விவாதத்திற்குரியதே. அந்த வகையில், இலங்கையின் அரசியல் அமைப்பில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஊழலற்ற, நீதியான நிர்வாகத்தை வழங்குவதாக வாக்குறுதியளித்து பதவியேற்றுள்ள தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், செம்மணி விவகாரத்தில் காட்டிவரும் மௌனமும் அலட்சியமும், தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு உதாரணமாக 2 சம்பவங்களை குறிப்பிட முடியும்.

## சம்பவம் - 1

கடந்த வருடம் செப்டம்பர் 1 ஆம் திகதி வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார, யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் 3ஆவது கட்டத்தின் பணிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் யாழ். பிரதேச அலுவலகத் திறப்பு, யாழ்ப்பாணம், மண்டை தீவு பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள நவீன கிரிக்கெட் மைதானத்தின் பணிகள், உலக தென்னை தினத்தை முன்னிட்டு புதுகுடியிருப்பில் "கப்துரு சவிய" தேசிய வேலைத்திட்டம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் போன்ற அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் இலங்கை - இந்திய மீனவர்களினாலும் இலங்கை - தமிழக அரசியல் வாதிகளினாலும் கடும் சர்ச்சைக்குரியதாக்கப் பட்டுள்ள கச்சதீவுக்கும் அதிரடி கண்காணிப்பு விஜயம் செய்து "இதுஎங்க ஏரியா உள்ளே வராதே" என்ற செய்தியை தமிழக, இந்திய அரசுகளுக்கும் இந்திய மீனவர்களுக்கும் நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் கூறியதுடன் அங்கு சென்ற முதல் இலங்கை ஜனாதிபதி என்ற பெயரையும் அநுரகுமார திசாநாயக்க இலங்கை வரலாற்றில் பதிவு செய்து கொண்டார்.

செப்டம்பர் 1 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்யவுள்ளதாக அறிவிப்புக்கள் வெளியான நிலையில் இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி நாட்டினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ள செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு செல்வார் என்ற எதிர்பார்ப்பு அப்போது தமிழ் மக்களிடமும் தமிழ் அரசியல் தரப்புக்களிடமும் ஏற்பட்டிருந்தது. அதைவிட ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு வருகைதர வேண்டுமென்ற வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டிருந்தன.

இதற்கு வலுசேர்க்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்வார் என முன்னதாக, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் உறுதியளித்திருந்தார். அதுமட்டுமன்றி அரச தரப்பின் பல்வேறு தரப்பினராலும் உறுதியுமளிக்கப் பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்திற்கு குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளே வந்து விட்ட ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி நின்ற போதும் செம்மணி வீதியை வாகனத் தொடரணியாக கடந்து பயணித்த போதிலும், செம்மணி மனிதப் புதைகுழியை சென்று பார்வையிடவில்லை. செம்மணிப் பகுதியில் வாகனத்தை மெதுவாக செலுத்திக் கூட அப்பகுதியை பார்க்க அவர் விரும்பவில்லை. அங்கு தனக்காக காத்திருந்த தமிழ் மக்களையும் அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

இது தமிழ் மக்களிடம் கடும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்திவிட்டதுடன் இலங்கை ஜனாதிபதிகள் வரிசையில் ஜனாதிபதி அநுரகுமாரவையும் ஒரு "மாற்றமில்லாத", "புதிய திசை காட்டாத" ஜனாதிபதியாக அடையாளப்படுத்தியது. ஆனால் இந்த நிலையிலிருந்து ஜனாதிபதி அநுரகுமார இன்னும் மாறவில்லை என்பதையே அண்மையில் பாராளுமன்றத்தில் அதிகம் பேசப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழி விடயம் தொடர்பில் தனது பாராளுமன்ற உரையில் வாய் திறக்காதது உறுதிப்படுத்தியுள்ளது.

## சம்பவம் - 2

கடந்த மாதம் 23,24,25,26 பாராளுமன்ற அமர்வுகளில் உயர் நீதிமன்றங்களின் நீதியரசர்கள் நியமனம், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது, போதைப்பொருள், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி ஆகிய 5 விடயங்களே சபையில் முழு ஆதிக்கம் செலுத்தி காரசாரமான விவாதங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தன. எதிர்க்கட்சிகள் செங்கோலை தூக்கிச்செல்ல முயற்சிக்குமளவுக்கு பாராளுமன்றம் அமளிதுமளிப்பட்டது.

இவ்வாறாக ஏதாவது அரசுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் எதிர்க்கட்சிகளினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் போதெல்லாம், அரசாங்கம் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகும்போதெல்லாம் விவாதத்தின் இறுதி நாளில் சபைக்கு வரும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு, விமர்சனங்களுக்கு வெள்ளையடித்து மூடி மறைத்து. எதிர்க்கட்சிகளில் பழி போட்டு, அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் என சில விடயங்களை பட்டியல் போட்டு அரசாங்கத்தை நியாயப்படுத்தி உரையாற்றிச் செல்வதே வழக்கம்.

அதேபோன்றே அந்த வார பாராளுமன்ற அமர்வுகளில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய 3 நாள் அமர்வுகளில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 25 ஆம் திகதி வியாழக்கிழமை சபைக்கு வருகைதந்த ஜனாதிபதி நீண்டதொருஉரை நிகழ்த்தி வழக்கம் போலவே அரசாங்கத்தின் மீதான எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களுக்கு, அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு வெள்ளையடித்து மூடி மறைத்தார்.

***(தொடர்ச்சி 17 பக்கம்)***

இலங்கை செய்திகள் Sri Lanka News

# புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டிணைவு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் சாத்தியமற்ற இணைவு என்பதே உண்மை!


## தொண்டா - அஷ்ரப் தீர்மானங்கள் தீர்க்கதரிசனமானவை என டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டு!

பெரியவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா மற்றும் அஸ்ரப் நானா ஆகியோரின் சமர்த்தியமான தீர்மானங்களே மலையக மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் இன்றைய எழுர்ச்சிக்கு அடித்தளம் அமைத்திருந்தன என்று தெரிவித்த ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எமது தமிழ் மக்கள் சார்ந்த மூத்த தலைவர்களின் குறுகிய அரசியல் நலன் சார்ந்த சிந்தனைகளே தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டியதுடன், அனுபவங்களில் இருந்து நாம் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டிணைவு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் புதிதாக தோன்றியுள்ள கட்சிகளின் கூட்டிணைவு என்பது சாத்தியமற்றவர்களின் இயலாமையைக் காட்டு இணைவு என்றும் அதில் நீதி மன்ற தண்டனை பெற்றவர்களும் உள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சின் வேலணை மற்றும் நல்லூர் பிரதேச சபைகளுக்கான கட்சி பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக தனித்தனியாக இன்று இடம்பெற்ற கலந்துரையாட லில், இதனை தெரிவித்த மூத்த தமிழ் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் தெரிவிக்கையில்: "தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில், தேர்தல் பின்னடைவுகளே கூட்டணி பற்றிய சிந்தனைகளை எமது தலைவர்களுக்கு ஏற்படுத்தியது.



70 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட அரசியல் சூழலே பரந்தளவான தமிழர் கூட்டணி உருவாக காரணமாக அமைந்தது.

ஆரம்பத்தில் அந்தக் கூட்டிணைவில் அப்போதைய மலையக மக்களின் தேசியத் தலைவரான சௌ. தொண்டமானும் முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவரான அஸ்ரப் அவர்களும் இணைந்திருந்தனர். எனினும், அவர்களின் தீர்க்கதரிசனமான சிந்தனைகள் காரணமாக பின்னாட்களில் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

அவர்களின் தீர்மானம் சரியானது என்பதை வரலாறு நிருபித்திருக்கின்றது.

அதேபோன்று, பின்னாட்களில் உருவாக்கப்பட்ட கூட்டமைப்புக்களும் சந்தர்ப்பவாத தீர்மானங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை என்பதை வரலாறு நிரூபித்திருக்கின்றது.

எம்மை பொறுத்தவரையில், மக்களின் நலன்களும் அபிலாசைகளுமே முதன்மைக்குரிய விடயங்களாகும். அதனடிப்படையிலேயே எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்" என்று தெரிவித்தார்.

# அநுர அரசு நாசிச பாணியிலான ஆட்சி முறைமையை மக்கள் மத்தியில் திணிக்கின்றது என்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன!




தற்போதைய அரசு தனது கட்சியின் தொண்டர்கள் மூலம் அரச நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களையும் கட்டுப்படுத்தும் ஒரு விசித்திரமான மற்றும் ஜனநாயகத்துக்குப் புறம்பான ஆட்சி முறையைத் திணிக்க முயற்சிக்கின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன குற்றம் சாட்டினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் 15ம் திகதி வியாழக்கிழமை அன்று நடைபெற்ற ஊடகவ-ியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "அரசைக் கைப்பற்றியதுடன் நில்லாமல், அரச இயந்திரத்தையும் முழுமையாகக் கைப்பற்ற வேண்டும் என்ற ரீதியில் தற்போதைய அமைச்சர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். கிராம உத்தியோகத்தர் முதல் மாவட்டச் செயலாளர் வரையிலான பதவிகளை, தேசிய மக்கள் சக்தியின் அரசியல் தொண்டர்களே வழிநடத்த வேண்டும் என்று அவர்கள் முனைகின்றார்கள். இது ஹிட்லரின் நாசிச ஆட்சியைப் போன்றது.

தங்களுக்குக் கிடைத்துள்ள நாடாளுமன்ற மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் போதாது என்று அமைச்சர் எரங்க குணசேகர போன்றோர் கருத்து வெளியிடுகின்றனர். நாட்டை ஜனநாயக ரீதியில் ஆளாமல், ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் ஒரு கட்சியினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயல்கின்றனர். ஹிட்லர் அன்று "தேசிய சோசலிசம்" என்ற போர்வையில் தனது கொடூரமான கொள்கைகளை நடைமுறைப் படுத்தியது போல், இவர்களும் அழகான வார்த்தைகளைக் கூறிக்கொண்டு, ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் கருத்துக்களை இந்த நாட்டுக்குள் திணிக்கப் பார்க்கின்றனர்.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள அனைவரும், தமக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்ற இந்த விகாரமான ஆட்சி மாதிரியைச் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். ஜனநாயகத்தை முற்றாக நிராகரிக்கும் இத்தகைய அச்சுறுத்தும் போக்கினை, மக்கள் விழிப்புணர்வுடன் அவதானிக்க வேண்டும்." என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

# நீதித்துறை சீர்திருத்தம், சிறைச்சாலை வன்முறைகள் தொடர்பாக அநுர அரசுக்கு எதிராக ஐ.நா.விடம் முறையிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டணி?

## சிறையில் இருக்க வேண்டிய சுரேன் ராகவன் அங்கு எப்படி? என ஊடகவியலாளர்கள் கேள்வி

நீதித்துறை சீர்திருத்த முன்மொழிவுகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற சிறைச்சாலை வன்முறைச் சம்பவம் தொடர்பில், ஜனநாயக மக்கள் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு தலைமையகத்திற்குச் சென்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச்சைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தலதா அத்துகோரள, பிரேமநாத் சி. தொலவத்த, அசாத் சாலி மற்றும் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அரசின் உத்தேச நீதித்துறை சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

"இலங்கையில் எவரும் இவ்வாறான மாற்றத்தைக் கோரவில்லை. சட்டத்தரணிகள், சிவில் சமூகத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எந்தவொரு வெளிப்படைத்தன்மையுமின்றி அரசு முன்னெடுக்கும் இந்த முயற்சியின் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், "அரசமைப்பின் 12(1) பிரிவின் கீழ் வரும் சமத்துவக் கோட்பாட்டுக்கு முரணாக, நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பதவிக்காலத்தை நீடிக்க அரசு முனைகின்றது. நாட்டில் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காது, வீணான குழப்பங்களை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாக உள்ளது." - என்று அவர் குறிப்பிட்டார்.




நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த, தலதா அத்துகோர "சம்பவம் நடந்து 10 நாள்கள் கடந்தும், இதுவரை இடைக்கால அறிக்கை கூட வெளியிடப்படவில்லை. இது துரதிர்ஷ்டவசமானது. கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் தோட்டாக்கள் போன்ற குறைந்தபட்ச பலப்பிரயோக முறைகளைக் கையாண்டிருக்க வேண்டும். இந்த வன்முறையில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். தண்டனை வழங்கப்படாத நிலையில், இவர்களின் "வாழும் உரிமை" பறிக்கப்பட்டுள்ளது. இது ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சட்டத்துக்குப் புறம்பானதாகும்." - என்று தெரிவித்தார்.

அரசின் நிர்வாகத் திறன் குறித்து விமர்சித்த அவர், "முறைமை மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் வாக்களித்தனர். ஆனால் அனுபவமற்ற நிர்வாகமே தற்போதைய நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஜனநாயகக் கட்டமைப்புக்குள் நின்று, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுக்கு "இதுவே போதும்" என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்" - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பூநகரி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக கடமையேற்ற திருமதி குணஜா!



பூநகரி பிரதேச செயலகத்தில் பதில் கடமை அடிப்படையில் உதவிப் பிரதேச செயலாளராக பணியாற்றி வந்த ச.குணஜா, 14.07.2026 அன்று நிரந்தர உதவிப் பிரதேச செயலாளராக உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது, பிரதேச செயலகத்தின் கணக்காளர் மற்றும் ஏனைய அலுவலர்கள் இணைந்து அவருக்கு உளமார்ந்த வரவேற்பை வழங்கி, புதிய பொறுப்பில் சிறப்பாகச் செயலாற்ற தங்களது நல்வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

புதிய பொறுப்பை ஏற்றுள்ள ச.குணஜாவுக்கு எதிர்கால பணிகள் அனைத்திலும் சிறப்பான வெற்றிகளை பெறுவதற்கு பிரதேச செயலகத்தினர் மற்றும் மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

(15 பக்கத் தொடர்ச்சி)

## அநுரவின் 'மௌன' அரசியலும் நீதியின் புதைகுழியாகும் செம்மணியும்!

ஆனால் இதில் ஜனாதிபதியும் அரசாங்கமும் திட்டமிட்டு ஒரு விடயத்தை செய்திருந்தன. அதுதான் ஜனாதிபதியினதும் - ஜே.வி.பி.- தேசிய
மக்கள் சக்தி அரசாங்கத்தினதும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது. அதாவது அந்த வார பாராளுமன்ற அமர்வுகளில் முக்கியமாக சிங்கள எதிர்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மட்டுமே ஜனாதிபதி அநுரகுமார கவனம் செலுத்தி பதில் வழங்கினார்.

அதேவேளை தமிழ் தேசியக்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பிலான கோரிக்கைகள், வலியுறுத்தல்கள், குற்றச்சாட்டுக்கள், தமிழ் மக்களின் உணர்வுகள் குறித்து ஜனாதிபதி தனது நீண்ட உரையில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பதில் வழங்கவில்லை. திட்டமிட்டே ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தை தனது பாராளுமன்ற உரையில் பேசாது புறக்கணித்தார்.

ஏன் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூட அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்து செம்மணி மனிதப்புதை குழிப்பகுதிக்கும் சென்றபோதும் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களை சந்திக்காது புறக்கணித்திருந்தார். செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியோ நீதி அமைச்சரோ, அதிகம் கவனம் செலுத்தவோ. இதுதொடர்பில் தமிழ் மக்களை சந்திக்கவோ தயாரில்லை என்பதே இவ்வாறான புறக்கணிப்புக்கள் மூலம் வெளிப்படுகின்றது. செம்மணி விடயத்தில் நீதியை நிலைநாட்ட முயன்றால் இராணுவத்தினரை தண்டிக்க வேண்டிவரும் என்பதாலும் அதன் மூலம் இராணுவத்தினரை பகைக்க வேண்டிவரும் என்பதாலுமே செம்மணி விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார அடக்கி வாசிக்கின்றார்.

இலங்கையில் செம்மணி மட்டுமன்றி, கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்பு துறைமுகம் என பல இடங்களில் மனிதப்
புதைகுழிகள் உள்ளநிலையில் இந்த புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்சக்களே தவிர நாம் அல்ல. இந்த புதை-குழிகள், காணலாலாக்கப்பட்டோருடன் தொடர்புடைய சிலர் வடக்கிலும் உள்ளனர். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராாட்சி சபைகளுக்கும் தெரிவாகியுள்ளனர். இந்த மனிதப்புதைகுழிகள் தொடர்பிலான, விசாரணைகள் போன்றவற்றுக்கு நாம் போதியளவு நிதியை ஒதுக்கி வசதிகளை செய்து கொடுத்துள்ளோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க பகிரங்கமாகவே அறிவித்திருந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார தொடர்ந்தும் செம்மணியை புறக்கணிப்பது ஏன்?

ஜனாதிபதி அநுரகுமார தனது அந்த பாராளுமன்ற உரையில்
ஒரு குடும்பத்திற்காக இராணுவத்தில் உள்ள ஏதாவது ஒரு குழு செயற்பட்டிருந்தால் இராணுவத்தினர் என்று கூடப்பாராமல் தண்டனை வழங்குவோம்" என்று குறிப்பிட்டிருந்தார். அதேவேளை மனிதப் புதை குழி விடயத்துடன் இராணுவத்தினரே தொடர்புபட்டுள்ள நிலையில் அவ்விடயத்தை ஜனாதிபதி தொடர்ந்து புறக்கணித்து வருகின்றார். அதனால் ஜனாதிபதியின் இந்தப் புறக்கணிப்பு தொடர்பில் "ஒரு குடும்பத்திற்காக இராணுவத்தில் உள்ள ஏதாவது ஒரு குழு செயற்பட்டிருந்தால் இராணுவத்தினர் என்று கூடப்பாராமல் தண்டனை வழங்குவோம்" அதேவேளை "ஒரு இனத்திற்கு எதிராக இராணுவத்தில் உள்ள ஏதாவது ஒரு குழு செயற்பட்டிருந்தால் இராணுவத்தினர் என்று பார்த்து தண்டனை வழங்க மாட்டோம்" என்பதுதான் ஜனாதிபதியின் நிலைப்பாடா என்பதே தமிழ் மக்களின் கேள்வியாகவுள்ளது.

எனவே அநுரகுமார அரசாங்கம் உண்மையான "மாற்றத்தை" விரும்பினால், அந்த மாற்றம் தென்னிலங்கைக்கு மட்டுமானதாக இல்லாமல், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் கண்ணீரையும் துடைப்பதாக இருக்க வேண்டும். இல்லாது விட்டால் இனவாத இலங்கை ஜனாதிபதிகள் வரிசையில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் எந்தவொரு மாற்றமும் இல்லாதவராக இணைக்கப்படுவார்.








**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays - Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

# இலங்கை கடற்பரப்பில் தொடர்ச்சியாக மீன் பிடித் திருட்டில் இந்திய மீனவர்கள் அத்துமீறிச் செயற்படுதை நிறுத்தக் கோரிக்கை!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம்.மொஹமட் ஆலம்




இலங்கை கடற்பரப்பிற்குள் தொடர்ச்சியாக அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் இறங்கு துறைகளுக்குள் நுழைந்து மீன் பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கையை கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சரிடம் பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன் வைத்துள்ள போதும் எவ்வித நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படவில்லை என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம்.மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தில் 11ம் திகதி அன்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்ற பல்வேறு வகையான பிரச்சனைகள், அதேபோன்று அண்மையில் இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையைக் கடந்து எமது இறங்குதுறை வரைக்கும், அதாவது மீனவர்கள் மீன் பிடிக்கும் இடம் வரைக்கும் வந்த விடயங்களை நான் இந்த ஊடக வாயிலாக உரிய தரப்புக்கு தெரிவிப்பதற்காக இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கின்றேன்.

குறிப்பாக, இந்த சட்டவிரோத மீன்பிடி முறைகள். இது தொடர்பாக பல விடயங்கள் மன்னார் மாவட்டத்திலும் வடக்கிலே காணப்பட்டாலும் மன்னார் மாவட்டத்திலே தொடர்ச்சியாக இது காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் நிர்வாக காலப்பகுதிகளிலே இந்தத் தொழில் முறைகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, இலங்கை மீனவர்கள் குறிப்பாக வட பகுதி மீனவர்கள் குறிப்பிட்ட தூரம் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கக் கூடிய அனுமதியை கடற்படையும் வழங்கியிருந்தது.

இருந்தபோதிலும், அந்தப் பகுதிகளில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்து கடல் உணவுகளையும் அறுவடை செய்து, அதன் ஊடாக கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை அன்றைய காலப்பகுதியிலே அவர்கள் செய்து வந்தார்கள்.

2009-க்கு பின்னர் யுத்தம் நிறைவுக்குப் பின்னர் படிப்படியாக அரசாங்கம் வேண்டிய தூரம் சென்று கடலில் நீங்கள் மீன் பிடிக்கலாம் என்று அந்த சூனியப் பிரதேசங்களை அகற்றிய பிறகு, இந்தத் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் எல்லை தாண்டியதாக இருக்கிறது.

டைனமட், சுருக்குவலை, இழுவைப்படகுகள், அதேபோன்று தங்கூசி கொண்டு தொழில் பிடிக்கும் முறைகள், அவ்வாறான 14 வகையான தடை செய்யப்பட்ட தொழில் முறைகளும் இப்போது இந்த வடக்குக் கடல். கடற்பரப்பிலும் அதேபோன்று மன்னார் மாவட்டத்திலும் பெருவாரியாகப் பெருகியிருக்கிறது.

இதை நாங்கள் தடுப்பதற்கும் எவ்வளவு முயற்சி எடுத்தாலும், மன்னார் மாவட்டத்தில் எங்களுக்குள்ளே பதிவு செய்யப்பட்டிருக்கின்ற பல மீன்பிடி கிராமங்கள், தோறும் இந்தத் தடை செய்யப்பட்ட தொழில்களை தங்களது வாழ்வாதாரம் என்று கூறிக்கொண்டு செய்து வருகிறார்கள்.

நாங்கள் கிராமங்களைக் குறிப்பிடப்பட்டாலும், குறிப்பிடா விட்டாலும் உண்மையிலேயே யார் யார் என்ன தொழில் செய்கிறார் என்று அந்தந்த கிராமங்களுக்கு தெரியும். எனவே, இதில் நான் குறிப்பிட்டு யாரையும் குற்றம் சொல்லவோ அல்லது இந்த விடயத்தில் ஒருவரைக் குறிப்பிடவோ நான் இந்த ஊடக சந்திப்பை செய்யவில்லை.

இந்தத் தொழில்கள்... நாங்கள் தலைவர்கள் பல்வேறுபட்ட கூட்டங்களிலே பங்கு பெற்றுகின்றோம், பல மாகாண கூட்டங்களிலும் நாங்கள் பங்கு பெற்றிருக்கிறோம்.

ஆனால் குறிப்பாக, மன்னார் மாவட்டம் தொடர்ந்து பேசும்போது எங்களுக்கு சில விடயங்களை அங்கு பேசும்போது நாங்கள் தடுப்பதா அல்லது மௌனமாக இருப்பதா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்தத் தடை செய்யப்பட்ட தொழில்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று பல்வேறு கட்டங்களில் பல்வேறு விதமான போராட்டங்களாக இருக்கட்டும் அல்லது பல அரசியல் தரப்புகளைச் சந்தித்து நாங்கள் மனுக்குடுத்த விடயங்கள் போன்ற பல விடயங்கள், பேசிய விடயங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன.

ஆனால் அவை அனைத்துமே பலனற்று, இன்று வரை நாங்கள் 2009-ல் எப்போது கலைக்கத் துவங்கினோமோ இந்த விடயத்தை, அப்போதிலிருந்து இன்று வரைக்கும் அந்த விஷயத்தைத் தான் கதைத்துக்கொண்டிருக்கின்றோம். எனவே, ஒரு விடயமும் தீர்ந்ததாக இல்லை. பல அரசுகள் வந்து போய்விட்டன.

தற்போது கூட புதிய கடற்றொழில் அமைச்சர் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றார். அவரை நாங்கள் பல தடவை சந்தித்து விட்டோம்.

கடந்த அரசாங்கங்களில் இருந்த கடற்றொழில் அமைச்சரை விட இப்போது இருக்கின்ற அமைச்சரை அமைச்சர் பொறுப்பெடுத்து ஒன்றரை வருடங்களிலே அவரை 15 தடவைக்கு மேல் நாங்கள் சந்தித்து எங்களது பிரச்சினைகளை வலியுறுத்தி, இந்த விடயங்களைத் தீர்த்து தாருங்கள் என்று.

ஒரு இணக்கமான செயல்பாட்டுடன் நாங்கள் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள அமைச்சரிடம் அணுகினாலும், அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை நிறுத்தலாம், இதை நிறுத்தலாம், உங்களுடைய அபிப்பிராயம் என்ன, என்று கேட்டுப் பெறுகிறாரே தவிர, எதுவுமே அவர் செய்வதாக இல்லை.

எனவே, இந்த விடயத்திலே கடந்த கால அரசாங்கம் செய்த தவறை தான் இப்போது இருக்கின்ற அரசாங்கம் செய்து வருகிறது. எந்தச் சட்டவிரோத மீன் பிடியும் இங்கு நின்றபாடில்லை.

குறிப்பாக, உள்ளூர் இழுவைப்படகு தொடர்பாக 2020-லே புத்தளத்தில் ஒரு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது, சமூக கடல் சூழல் சார்ந்த ஒரு அமைப்பினால் அங்கு வழக்குத் தாக்கல் பட்டு 23 பேர் இந்த வழக்கு போனது.

ஆனால், இறுதியில் அந்த 23 பேரும் "நாங்கள் அவ்வாறான தொழிலைச் செய்யவில்லை" என்று சொன்னார்கள். திணைக்களமும் "நாங்கள் அவ்வாறான தொழிலுக்கு அனுமதி வழங்கவில்லை" என்று சொன்னார்கள்.எனவே சட்டவிரோத மீன்பிடி தொழிலை நிறுத்த எந்த தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னாரில் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்!

## நகர சபையின் ஏற்பாட்டில் முப் படையுடன் சுகாதார துறை இணைந்து நடவடிக்கை

(15-07-2026)

மன்னார் நகர சபை பிரிவில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில், பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பொது சுகாதார பரிசோதகர்கள், முப் படையுடன் இணைந்து விசேட வேலைத்திட்டம் 15ம் திகதி அன்று புதன்கிழமை காலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் அன்றைய தினம் புதன்கிழமை (15) காலை மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் தலைமையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு குறித்த டெங்கு பரிசோதனை விசேட வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

அன்றைய தினம் அரச அலுவலகங்கள், தங்கும் விடுதிகள், வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் போது டெங்கு நுளம்பு பெறுகுவதற்கு காரணமான இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அவற்றை கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படும். அறிவித்தல்களை மீறி டெங்கு நுளம்பின் பெருக்கத்திற்கு உடந்தையாக உள்ள உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் கடற்படை, இராணுவம், பொது சுகாதார பரிசோதகர் உள்ளடங்கிய குழுவினர் அரச அலுவலகங்கள், தங்கும் விடுதிகள், வர்த்தக நிலையங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டு டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கு ஏதுவாக காணப்படும் இடங்கள் குறித்து கண்காணித்து நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னாரில் அதிரடியாக அரச நிறுவனங்கள் மீது பாய்ந்த டெங்கு ஒழிப்பு சட்டம்

## 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்



(16-07-2026)

மன்னார் மாவட்டத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு செயல் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததன் அடிப்படையில், ஒரே நாளில் 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"சட்டம் அனைவருக்கும் சமமானது" என்பதை நிரூபிக்கும் வகையில், தனியார் இடங்கள் மட்டுமன்றி, அரச நிறுவனங்கள் மீதும் எந்தவித பாரபட்சமும் இன்றி சுகாதார துறை மற்றும் முப்படை இணைந்து இந்த அதிரடி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் நகர சபை பிரிவில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பொது சுகாதார பரிசோதகர்கள், முப்படையின் இணைந்து விசேட வேலைத்திட்டம் கடந்த 15-07-2026 அன்று புதன்கிழமை காலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் அரச அலுவலகங்கள், விடுதிகள்,வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது டெங்கு நுளம்பு பெறுகுவதற்கு காரணமான இடங்கள் அடையாளம் காணப்பட்டது.இதன் போது டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததன் அடிப்படையில், 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# மார்க்கம் மாநகர சபையின் ஆதரவுடனும் பல அமைப்புக்களின் ஆசிகளுடனும் மார்க்கம் நகரில் விழாக் கோலம் பூணுகின்றது 'தமிழர் தெருவிழா'

கனடியத் தமிழர் பேரவையினால் **(Canadian Tamil Congress)** ஏற்பாடு செய்யப்பட்ட **Tamil Fest** 2026 இன் உத்தியோகபூர்வ அறிமுக விழா, ஜூலை 13, 2026 அன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள **Pan Am Centre** கூட்ட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

ஓகஸ்ட் 22 - 23 ஆகிய திகதிகளில் **City of Markham** இல் நடைபெறவுள்ள **Tamil Fest** 2026 இற்கான எதிர்பார்ப்பை அனைவர் மத்தியிலும் அதிகரித்த இந்த அறிமுக விழா, பெரும் வெற்றியடைந்தது.

10 ஆண்டுகளாக றொரண்டோவில் வெற்றிகரமாக நடைபெற்ற வுயஅடை குநளவ, தனது 11ஆவது ஆண்டில் மார்க்கம் நகரில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிப்பது குறித்து இங்கு அறிவிக்கப்பட்டது.

கனடாவின் பல்வேறு இன, மொழி மக்களும் வாழும் முக்கிய நகரங்களில் ஒன்றான மார்க்கம் நகரின் ஆதரவுடன், தமிழர் பண்பாடு, கலை, பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் புதிய பயணமாக இது அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வு கனடா தேசிய கீதத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

கனடிய தமிழர் பேரவையின் துணைத் தலைவர் துஷி ஞானப்பிரகாசம் தனது உரையில், **Tamil Fest** என்பது தமிழர் மொழி, பண்பாடு, பாரம்பரியம், அடையாளத்தை உலகுக்கு பெருமையுடன் வெளிப்படுத்தும் திருவிழா. தமிழரின் வரலாறு, கலை, இசை, நடனம், இலக்கியம் மற்றும் உலகப் புகழ்பெற்ற தமிழர் உணவு கலாசாரத்தை அறிமுகப்படுத்தும் முக்கிய மேடையாக ***Tamil Fest*** விளங்குகிறது. இந்த விழா மார்க்கம் நகருக்கு இடமாற்றம் செய்யப்படுவது விழாவின் தொடர்ச்சியான வளர்ச்சியையும், மார்க்கம் நகரத்துடனான வலுவான உறவையும் பிரதிபலிக்கிறது" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மார்க்கம் மேயர் குசயமெ ளுஉயசிவைவெ தனது உரையில், **Tamil Fest** பெருவிழாவை மார்க்கம் நகரம் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார்.

அறிமுக விழாவில் பல்வேறு நகரசபை உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சமூக தலைவர்கள் பெருமளவில் கலந்துகொண்டிருப்பது, இந்த விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றிய மார்க்கம் நகர மேயர்,

"**Tamil Fest** இற்கு மார்க்கம் நகரம் முழுமையான ஆதரவை வழங்கும். தமிழர் சமூகத்தினர் மார்க்கம் நகருக்கும் கனடாவிற்கும் வழங்கிய பங்களிப்புகள் அளப்பரியவை" என்று பாராட்டினார்.

கடந்த ஆண்டுகளில் **Tamil Fest** இல் கலந்து கொண்ட அனுபவங்களை நினைவுகூர்ந்த அவர், அங்கிருந்த உற்சாகமான சூழலும், சுவைமிகு தமிழர் உணவுகளும் இன்னும் நினைவில் இருப்பதாக கூறி, **Tamil Fest** தமிழர் கலாசாரத்தின் மிகப்பெரிய கொண்டாட்டமாக வர்ணித்தார்.

இதனைத் தொடர்ந்து பாரம்பரிய பறை இசையின் முழக்கத்துடன் **Tamil Fest** 2026 அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. நினைவுகூரத்தக்க தருணமாக, மேயர் **Frank Scarpitti** தாமும் பறையை இசைத்து, ஆகஸ்ட் 22 - 23 ஆகிய விழாத் திகதிகளை அறிவித்து ***Tamil Fest*** 2026 ஐ உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பறை இசைத்த மேயரின் செயல், அரங்கில் கூடியிருந்தோரின் கரகோஷ வரவேற்பைப் பெற்றதுடன், தமிழர் பண்பாட்டை மார்க்கம் நகரம் அன்புடன் தழுவி வரவேற்கும் அடையாளமாகவும் அமைந்தது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான **Doctor Helena Jaczek** மற்றும் **Juanita Nathan** ஆகியோரும் உரையாற்றினர். தமிழர் கலாசாரத்தின் பெருமையயும், கனடாவின் பன்முகத்தன்மையை மேலும் வலுப்படுத்துவதில் **Tamil Fest** வகிக்கும் முக்கிய பங்கையும் அவர்கள் பாராட்டினர்.

மேலும், **Markham Regional Councillors Alan Ho, Jim Jones,** நகரசபை உறுப்பினர்களான **Ritch Lau, Andrew Keyes, Amanda Yeung Collucci, Nimisha Patel, Isa Lee** உள்ளிட்டோர், **York Regional Police** பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், நிறுவன ஆதரவாளர்கள், கலைஞர்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஏராளமான சிறப்பு விருந்தினர்கள் இந்த அறிமுக விழாவில் கலந்துகொண்டனர்.

தமிழர் தெருவிழாவாக தொடங்கிய **Tamil Fest,** இன்று கனடாவின் மிகப்பெரிய கலாசார மற்றும் பொருளாதார விழாக்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றுள்ளது.

ஆண்டுதோறும் 250,000 அதிகமான மக்கள் இந்த விழாவில் பங்கேற்கின்றனர். 100 இற்கும் மேற்பட்ட வர்த்தகக் கூடங்கள், 150 இற்கும் அதிகமான கலைஞர்களின் நிகழ்ச்சிகள், 300 இற்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் பங்களிப்பு ஆகியவற்றுடன் இரண்டு நாட்கள் கோலாகலமாக இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

இந்த விழா, மார்க்கம் நகரத்தில் நடைபெறுவது றொரண்டோ பெரும்பாகத்தில் ***(GTA)*** ஒரு முக்கிய கலாசார மைல்கல்லாக கருதப்படுகிறது.

***Tamil Fest*** 2026 இன் அறிமுக விழா வெற்றிகரமாக நிறைவடைந்துள்ள நிலையில், இந்த ஆண்டின் விழாவும் தமிழர் பாரம்பரியம், கலாசாரம், சமூக ஒற்றுமையை உலகுக்கு எடுத்துரைக்கும் மறக்கமுடியாத கொண்டாட்டமாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**"Tamil Fest** என்பது அனைவருக்குமான விழா. மீண்டும் ஒன்றிணைவோம். நமது அடையாளத்தை பெருமையுடன் கொண்டாடுவோம். வுயஅடை குநளவ இன் 11ஆவது ஆண்டை இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய மறக்கமுடியாத விழாவாக மாற்றுவோம்" என கனடியத் தமிழர் பேரவை பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

---

*Article Credits go to Mr. Haren of Yugam Radio*




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
Canada
100
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1205



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருநந்தீஸ்வரம்
## இரத்மலானை, கொழும்பு

*“குற்றம் நீ குணங்கள் நீ கூடலால வாயிலாய்*
*சுற்றம் நீ பிரானும் நீ தொடர்நடநிலங்கு சோதி நீ*
*குற்றநூற் கருத்தும் நீ அருத்தமின்ப மென்றில்லை*
*முற்றும் நீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே.”*

பௌத்த துறவியாகிய ராகுல தேரரின் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ள சிவாலயம், இரத்மலானையில் காணப்படும் பழைய சிவாலயமெனக் கருதுவர். சிங்களத்திலே கொனா என்பது தமிழிலே எருது எனக் கூறப்பட்டபோதிலும் சிவாலயத்துடன் தொடர்புபடும்போது அது நந்தியைக் குறிக்கின்றது. நந்தி கோயில் என்று தமிழிலே குறிப்பிடப்படும் இவ்வாலயத்தை சிங்களமொழியிலே ராகுல தேரர் ஈஸ்வரன் கோயில் என்று குறிப்பிட்டுள்ளமையை நோக்கும்போது, இச்சிவாலயம் பண்டைநாளில் நந்தீஸ்வரம் என்ற பெயரைக் கொண்டு விளங்கியிருக்கவேண்டும். ஏனவே திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், சுழிபுரம் சம்புநாதேஸ்வரம் போன்று பழமை பொருந்திய இக்கோவிலை திருநந்தீஸ்வரம் என வழங்கிவருகின்றனர்.

மண்ணுள் மறைந்திருந்து வெளிப்பட்டுள்ள சிவாலயச் சின்னங்கள் மற்றும் ராகுல தேரருடைய குறிப்புக்கள் என்பன பல உண்மைகளை எமக்குத் தெளிவுறுத்துகின்றன. ஐரோப்பியர் இந்நாட்டில் அடியெடுத்து வைக்காத காலப்பகுதியிலே, அதாவது ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையின் மேற்குக்கரையில் அமைந்திருந்த கோட்டை இராசதானியில் கொழும்புக்கு அண்மையில் இரத்மலானையில், மிகப் பெரிய சிவாலயம் இருந்துள்ளது. இங்கு ஆகம முறைப்படி சிறப்பானப் பூசைகள் நடைபெற்றுள்ளன. தமிழ்மொழியில் இறைவன்மீது தோத்ததிரங்கள் பாடப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலிலதமிழ் மக்கள் வாழ்ந்துள்ளதோடு, தமிழ்மொழியையும், இந்துசமயத்தையும் பேணி உயர்நிலையில் இம்மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

ஈழவரலாறு என்ற போர்வையில் பல தடவைகள் மகாவம்சம் பௌத்த பிக்குகளால் மாற்றம் செய்யப்பட்டு இடைச் செருகல்கள் நிகழ்ந்துள்ளன. பாடப்புத்தகங்களிலிருந்து ஈழத்தமிழர்களுடைய வரலாறு நீக்கப்பட்டு, உண்மைக்குப் புறம்பான செய்திகள் நூல்களிலே இடம்பெற்றுள்ளன.

புத்தபிரான் அருளிய போதனைகளினின்றும் நீங்கி இரத்த ஆறு பெருக்கெடுத்தோட வைக்கும் முயற்சியில் பௌத்தகுருமார் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் மதிப்பிற்குரிய பௌத்த மதகுருவான ராகுல தேரர் அவர்களின் பாடல்களிலே காணப்படும் கூற்றுக்கள், நம்பகத்தன்மை கொண்டவை. பிறமொழி, மத, வுரலாற்றை மூடிமறைக்காது உள்ளதை உள்ளபடியே எடுத்தியம்பிய இராகுல தேரர், பெருந்துறவி என்பதையும் வரலாறு மறுக்காது.

அண்மையில் திருநந்தீஸ்வரம் சிவாலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து சற்றுத்தொலைவில் பிறதேவைகளுக்காக நிலத்தை அகழ்ந்தபோது, ஒரு அழகிய அம்மன்சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. நில அகழ்வின்போது ஏற்பட்ட தாக்கத்தால் விக்கிரகத்தின் தலைப்பகுதி துண்டிக்கப்பட்டுவிட்டது. தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இச்சிலை, 11ஆம் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென தொல்பொருள் ஆய்வாளர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளனர். தற்போது மண்ணுள் இருந்து மீளத்தோன்றிய திருநந்தீஸ்வரம் சிவாலயம், பல வழிகளிலும் இந்து, பௌத்தமக்களிடையே பிரபலமாகியுள்ளது. சிங்கள இனத்தைச்சேர்ந்த பெரியவரே இக்கோவிலின் தர்மகர்த்தாவாகவும், பூசகராகவும் செயற்பட்டபோதிலும், திருநந்தீஸ்வரம் இந்துசமயப் புனிதத்தலம் என்னும் கருத்துடையவராகக் காணப்படுகின்றார்.

மன்னர்களாலும், பெருமனது கொண்டோராலும் இரத்மலானை திருநந்தீஸ்வரத்திற்கு மானியமாக வழங்கப்பட்ட ஏழாயிரம் ஏக்கர் காணி, அந்நியராட்சிக் காலத்திலே பிறதேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரத்மலானை திருநந்தீஸ்வரத்திலே கடந்த சில ஆண்டுகளாக மகாசிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்து, பௌத்த மதத்தினர் இணைந்து செய்யும் மகாசிவராத்திரி நிகழ்வுகளை அந்தணர்களே செய்து வருகின்றனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின் திருநந்தீஸ்வரத்திலே தமிழில் பக்திப்பாடல்களும், சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர் வருகையினால் ஈழத்திலே இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்ட நிலையே தற்காலத்திலும் காணப்படுகின்றது. ஓடமும் ஒருநாள் வண்டியிலேறும், வண்டியும் ஒருநாள் ஓடத்திலேறும் என்பதற்கமைய, நிச்சயமாகத் தமிழர்வாழ்வில் சுபீட்சமேற்படும் வேளையில், தாயகத்திலே வாழும் எதிர்காலச் சந்ததியினரோடு, புலம்பெயர்ந்து வாழும் எதிர்காலச் சந்ததியினர்க்கும் இந்து ஆலயங்களோடு தொடர்புபட்டுக்காணப்படும் இவ்வாறான வரலாற்றுக் குறிப்புக்கள், தமிழர்களுடைய ஆதிவரலாற்றைப் பின்னோக்கிச் சென்று ஆய்வு செய்ய உதவியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

*“ வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே ”*

**வளரும்...**



# 29ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

(நவக்கிரி, புத்தூர்)



விடுதலை வேங்கையோடு வீரமிகு போராளியாய்
விண்ணில் மறைந்த மாவீரனே!
மண்ணில் நீர் வாழ்ந்த காலம் குறைவே – ஆனாலும்
சோதனைகளையும் வேதனைகளையும்
சாதனைகளாக்கி அந்த சாதனைகளின்
சாம்ராச்சியத்தின் சரித்திரம் – நீர்
தேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவன் நீர்
வித்திட்டவன் வித்தாகி போன
வித்தைதான் என்ன!
மண்ணுக்காய் மாண்டவர் என்பதனால் நிறைவு எமக்கு
மீண்டும் வருவீர் என நாம் ஏங்குகின்றோம்
ஈரவிழிகளுடன்...

தோற்றம் 29-12-1972

மறைவு 19-07-1997

ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

(416) 888-1128, (905) 205-1070

# பெருந்தோட்டப் பாடசாலைகளில் ரோபோடிக்ஸ் கழகங்களை நிறுவும் நோக்கில் ஆசிரியர்களுக்கான நவீன தொழில்நுட்பப் பயிற்சி

பெருந்தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதோடு, அவர்களின் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் திறன்களை வளர்க்கும் நோக்கில், 2026 ஜூலை 10, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில், ஹட்டன் சீடா கல்வி அபிவிருத்தி வளநிலையத்தில், மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள தரம் 1***AB*** பெருந்தோட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான மூன்று நாள் ரோபோடிக்ஸ் செயன்முறைப் பயிற்சி மற்றும் கருத்தரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது.

கல்வி அமைச்சின் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி செந்தில் வதனி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 14 பெருந்தோட்டப் பாடசாலைகள் பங்கேற்றன. 42 ஆசிரியர்கள் முழுமையான ரோபோடிக்ஸ் பயிற்சியைப் பெற்றனர். மேலும், பங்கேற்ற ஒவ்வொரு பாடசாலைக்கும் ரோபோடிக்ஸ் கழகங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆரம்பகட்ட உபகரணங்களும் இந்நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

இன்றைய உலகில் ரோபோடிக்ஸ் கல்வி, மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனை, பிரச்சினைத் தீர்க்கும் திறன், படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் முக்கிய கருவியாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் பிரதான அனுசரணையாளர்களாக கல்வி அமைச்சின் பெருந்தோட்டப் பிரிவு, **Ratnam Foundation (UK)** மற்றும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு ***(IMHO – USA)*** ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டன.

மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் எதிர்காலத்தில் பெருந்தோட்டத் துறைசார்ந்த ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன் மூலம் மாணவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்த்து, உலகத் தரத்திலான புத்தாக்கங்களையும் புதிய கண்டுபிடிப்புகளையும் உருவாக்கும் தலைமுறையை உருவாக்குவதற்கு இத்திட்டம் உறுதுணையாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.









# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank | TD Canada Trust | NATIONAL BANK | RFA
FIRST NATIONAL FINANCIAL LP | Manulife | Desjardins
MCAP | HOME TRUST | EQUITABLE BANK | radius financial | RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION, BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)

உதயம் 1580 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 17, 2026

# கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 12 — 07 — 2026 ஞாயிற்றுக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.





ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் கருங்கற்களால் தெய்வங்களின் அழகிய சிறுகோயில்கள் அமைக்கப்பெற்றும் விநாயகப் பெருமான் கம்பீரமாக வீற்றிருக்கும் மூலஸ்த்தானம் நிறுவப்பெற்றும் அண்மையிம் மஹா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்ற பின்னர் நடைபெறும் முதலாவது கொடியேற்றமும் வருடாந்த மஹோற்சவமும் இது தான். எனவே அடியார்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு யவிநாயகனை வழிபட்டார்கள். தேவஸ்த்தானத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்கள் கொடியேற்றும் வைபவத்தை ஏற்று நடத்தினார் சுமார் 50க்கும் மேற்பட்ட சிவாச்சாரியப் பெருமக்கள் அங்கு அவரைச் சூழ்ந்து நின்று வேதபராயங்களையும் திருமுறைகள் மற்றும் தேவாரங்கள் ஆகியவற்றை ஓதி நிற்க கொடியேற்றம் இனிதே நிறைவேறியது.

# கல்முனை பிராந்திய இணையத்தின் கோடை ஒன்றுகூடலின்போது "தமிழ்ச் சமூக மைய" நிதிக்காக 10000 டாலர்கள் அமைப்பின் சார்பில் வழங்கப்பெற்றது




கனடாவில் இயங்கிவரும் -கல்முனை பிராந்திய இணையத்தின் கோடை கால ஒன்றுகூடல், சமூக உறவை வலுப்படுத்தும் நிகழ்வாக கடந்த 11-07-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோசவில் அமைந்துள்ள மெலிகன் பூங்காவில் நடைபெற்றது
இந்நிகழ்வின் போது, ஸகாபுறோவில் தமிழ் சமூக மையம் அமைக்கும் கட்டட நிதிக்காக 10,000 டாலர் நிதியுதவிக்கான மாதிரிக் காசோலையை இணையத்தின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள், தமிழ்ச் சமூக மையத்தின் இயக்குனர்களில் ஒருவரான ரமணன் அவர்களிடம் அங்கத்தவர்கள் பலர் இணைந்து நிற்க உத்தியோகபூர்வமாக கையளித்தார். இந்த நிதி சமூக உறுப்பினர்களின் பங்களிப்பால் திரட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் — முஸ்லிம் கூட்டணியில் பாலியல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டவர்களே அதிகமாக உள்ளார்கள் என்கிறார் அமைச்சர் சந்திரசேகர்



தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள புதிய கூட்டணி, வெறும் "கூட்டுச் சாம்பார்" போன்றதே தவிர, அது மக்களுக்கான கூட்டணியல்ல அத்துடன் இந்த பொருத்தமற்ற கூட்டணியில் பாலியல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்படடவர்களே அதிகம் காணப்படுகின்றார்கள் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் தெரிவித்தார்.

## Ontario Liberal Candidate for Scarbrough Southwest Ahsan-ul-hafiz visited Canada Kanthaswamy Temple

# கனடா கந்தசுவாமி ஆலயத்தில் ஸ்காபுறோ தென்மேற்கு மாகாணத் தொகுதி லிபரல் கட்சி வேட்பாளர் அசனுக்கு ஆசி வழங்கிய ஆலயத்தின் குருமார்கள்!



விரைவில் நடைபெறவுள்ள ஒன்றாரியோவின் ஸ்காபுறோ தென் மேற்கு **(Scarbrough Southwest)** தொகுதிக்கான இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற அசன் அல் ஹவிஸ் அவர்கள்
(**Candidate Ahsan-ul-hafiz**) அண்மையில் அதே தொகுதியில் உள்ள கனடா கந்தசுவாமி ஆலயத்திற்கு ஆசி பெறுவதற்காகச் சென்றிருந்தார். அங்கு அவரை வரவேற்ற ஆலயத்தின் நிர்வாக சபையினரும் ஆலயக் குருக்கள்மாரும் காளாஞ்சி வழங்கி அவருக்கு ஆசி வழங்கினர்.
(தொடர்ச்சி 14ம் பக்கம்)